# வாழ்விக்கவே சட்டம் வாடச்செய்ய அல்ல!

## வகுப்பு நீதி வழக்கு முன்னேற்பாட்டு தந்திரம்

## சமூக நீதி வழங்குக, தயங்கினல் கிளர்ச்சிதான்


# திராவிடநாடு

மலர் 9 || 6—8—50 || இதழ் ப

இலங்கை 15 சதம்] விலை அணு இரண்டு [மலாய் நாடு 12 காசு


## ★ தோழர்கள்! ★




'பட்டினிச்சாவு' நாடெங்கும் ஆரம்பித்துவிட்டதாகப் பத்திரிகைகளில் வரும் செய்திகள் மனதைப் பதறச் செய்கின்றன. மக்கள் நலன் பேசி, ஆட்சிப்பீடமேறிய 'காங்கிரஸ் ஆட்சியும்' 'பட்டினிச் சாவும்' தோழர்களாகுகிருர்கள்! இதைத் தவிர்க்கும் சாதுர்யம் இல்லாததால் வர வர இத்தோழமை பலப்படுகிறதேயொழிய குறைவதாகத் தெரியவில்லை!!

## சி. என். ஏ. வேண்டுகோள்

"சமுகநீதி வழங்குவதற்குச் சாதகமாக அரசியலமைப்பைத் திருத்தியமைக்கவேண்டும்- அதற்கான முயற்சிகளில் ஆளவந்தாரும் அவரைச் சார்ந்தோரும் தயங்குதல் தகாது; தயங்கினுல் நாட்டில் கிளர்ச்சிக்கு வித்தூன்றுவதாகும்" என்று சென்னையில் ஆக 2-ந்தேதியன்று மாணவர்கள் வேலை நிறுத்தப் பொதுக்கூட்டத்தில் பேசிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணுதுரை வெளியிட்டார். மேலும் பேசுகையில் அவர் கூறியதாவது, "தமிழர் வீரம் நிறைந்தவர்கள் — அவர்களது வீரம் இமயத்தில் கொடி பொறித்தது! கடல் கடந்து கப்பலோட்டி வியாபாரம் நடத்தியோர், தமிழர்! ஐம்பெருங்காப்பியங்களைத் தந்தது,தமிழரின் கலைப்பண்பு! தமிழர்கள் நாகரிகம் தன்னிகரில்லாதது — தனிப்பெருமையுடையது! ஆனுல் ஆரியம்தந்த நாகரிகம், அது புகுத்திய முறைகள் தமிழ்நாட்டைச் சீர்குலைத்தன. பார்ப்பனீயக் கோட்பாடுகள் மக்களைமூடநம்பிக்கைக்கு இரையாக்கிற்று—அறியாமைப் படுகுழியில் தள்ளியது, தமிழனை வீழ்த்தியது! வீரனை கோழையாக்கியது!!" என்று குறிப்பிட்டார்.

பார்ப்பனீயம் தமது ஆதிபத்யத்தை மக்களிடம் நீடிக்கும் செய்யும் வகையில் அன்று தொட்டு கையாண்டு வந்திருக்கும் சூழ்ச்சித்திட்டங்கள் குறித்து. சி. என். ஏ. குறிப்பிடுகையில் "ஆங்கிலத்தை மிலேச்சபாஷை என்று கூறினர். அதைப்படிக்கலாமோ, நீங்கள்' என்று உபதேசம் செய்தனர். நமக்கு அந்த ஞானேபதேசம் செய்தனர்—அதை நம்பிய நம்மனோர் கெட்டனர்! ஆனுல் அதேநேரத்தில் அவர்கள் அந்தமிலேச்ச பாஷையைக் கற்கத்தவறவில்லை. படித்தார்கள்! கல்விப்பீடத்தைப் பிடித்துக்கொண்டார்கள்! இதன்விளைவாக எங்கும் அவர்கள் ஆதிக்கம் பரவியது. அதிகாரத்திலே அவர்கள்! விஞ்ஞானத் துறையிலே அவர்கள்! வெளிநாட்டிலே, உலவினர்! பொருளாதார அறிஞர்களாக மாறினர்! 'எங்கும் அவர்கள்மயம்' ஏற்பட்டது!

ஆனுல், "மிலேச்ச பாஷையைப் படியாதீர்!" என்ற இதோபதேசத்தைக் கேட்டத் தமிழர் கெட்டனர். முன்னேறுவதற்கான வழி வகைகளை இழந்தனர், ஏமாந்தனர்! இதை மீட்டு, ஏமாந்தோரும் ஏற்றங் காணவேண்டுமென்னும் பெரு நோக்குடன் கொண்டுவரப்பட்டதுதான் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை. இதை, நாம் கைவிட்டோமானுல் தமிழகம் தாழ்ந்தது—அழிந்தது—ஒழிந்தது!" என்று ஆத்திரத்தோடு கூறினுர்.

"சட்டத்தையும் தங்கள் தந்திரத்தையும் கொண்டு எதையும் சாதித்துக்கொள்ளமுடியுமென்று 'அவர்கள்' நினைப்பார்களேயானுல்அவர்களுக்கு இப்போதே நான் எச்சரிக்க விரும்புகிறேன். பின், 'வல்லோன் வகுத்ததே வாய்க்கால்' என்ற முறையைப் பின்பற்றத் தயங்கமாட்டார்கள், ஏமாற்றமடைந்தோர். அந்நிலை ஏற்படவேண்டுமென்று நாட்டு நலனில் அக்கரை கொண்டோர் விரும்பமாட்டார்கள். ஆகவே, இன்று தீர்ப்பு கிடைத்த மகிழ்ச்சியால் நம்மை ஏளனத்தோடு, ஏறெடுத்துப் பார்க்கும் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லோருக்கும் சமநீதி வழங்கும் வகுப்புவாரிமுறை ஒழிந்தது என்று எக்காளமிடவேண்டாம். எதிர்காலத்தைப்பற்றி எண்ணுங்கள். தமிழகத்தில் ,தென் ஆப்பிரிக்கா' ஏற்படக்கூடாது என்பதை நினையுங்கள். பெரும்பான்மைச் சமூகத்திற்குத் துரோகம் செய்யும் சட்டத்தை மாற்ற வாருங்கள். முன்னணியிலிருந்து, சட்டத்தைத் திருத்தும், முயற்சிக்கு வழிகாட்டியாயிருங்கள்" என்று பார்ப்பனர்களை நோக்கி அறைகூவி அழைத்தார்.


(8-ம் பக்கம் பார்க்க)


## சக்தியைத் திரட்டுவீர் தகாப்போக்கை தகர்ப்பீர்!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பாளர் தோழர் கே. எ. மதியழகன் கீழ்க்கண்ட வேண்டுகோளை வெளியிட்டுள்ளார்:—

திராவிட மாணவர்களின் கல்வித்துறையின் பலனை அனுபவிப்பதற்கு வழி வகை செய்த வகுப்புவாரி முறை செல்லுபடியாகாது, சட்டப்படி தவருனது, இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணுனது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டது. வகுப்புவாரி முறை ஒழிக்கப்படுமானுல் திராவிட மாணவர் சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய தீங்கு நிகழ இருக்கிறது என்பதைக் கூறத் தேவையில்லை. நம்மையும், நமது பின்வருபவர்களையும் படுகுழியிலே தள்ளிவிட்டு, ஆதிக்கபுரியினர், தங்களது அக்கிரமமான செல்வாக்கை நிலைநாட்டிக்கொள்ளச் செய்யப்படும் சூது நிறைந்த சதித் திட்டந்தான், சட்டத்தின் சந்து பொந்துகளிலே நுழைந்தேனும் தங்களுக்கு புகலிடம் தேடும் முயற்சி. மாணவர் உலகுக்கு நேர்ந்துள்ள பயங்கரமான இந்தச் சோதனையைத் திராவிட மாணவர்கள் உணர்ந்திருக்கிருர்கள். அவர்களது அடிப்படை உரிமைக்கே ஆபத்து சூழும் நிலையை அவர்கள் அநுமதிக்கத் தயாராக இல்லை. அவர்களது ஆற்றல் மிகுந்த கிளர்ச்சியினுல்தான் திராவிட மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள தீமை தவிடுபொடியாக வேண்டும். இந்த முயற்சியில் சென்னைக் கல்லூரிகளும் குறிப்பாக பச்சையப்பன் கல்லூரியும், வேலை நிறுத்தம் செய்து, மாணவர் மாபெரும் ஊர்வலமும், கூட்டமும் நடத்தி, "வகுப்புநீதி ஒழிக்கப்படக்கூடாது, சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய், சட்டத்தைத் திருத்து" என்ற கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிருர்கள். அவர்களது உணர்ச்சிக்கும் உரிமை வேட்கைக்கும் நமது பாராட்டுதல். சென்னை மாணவர்களைப் போலவே வெளியூர் மாணவர்களும் இந்தப் பிரச்னையில் தங்களது கருத்தைத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டும். திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் எல்லா மாணவர்களையும் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றிச் சென்னை சர்க்காருக்கு அனுப்ப வேண்டுகிறேன். வகுப்பு நீதி வேண்டும் என்று வற்புறுத்த சென்னையில் மாகாண மாணவர் மாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது. சென்னை மாணவர்கள் அதற்கான ஆரம்ப முயற்சியில் உள்ளார்கள். எனவே மாகாணம் முழுதும் இந்த பிரச்னைக்குள்ள ஆதரவையும், நமது கூட்டுசக்தியின் வலிமையும் தெரியப்படுத்த வேண்டியிருக்கிறது. எனவே ஆங்காங்குள்ள மாணவத் தோழர்கள், குறிப்பாகத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகங்கள், பலரையும் திரட்டி, தங்களது தீர்மானத்தைத் தெரிவிக்கக் கோருகிறேன்.

# கழுகுகள் திருவிழா

ஆள் அரவங் கேட்டதும் படத்தை விரித்துக்கொண்டு, பயங்கர ஆட்டமாடும் நாகத்தின் நர்த்தனம் நெஞ்சில் நடுக்கத்தைத்தான் தூவும். பிணநாற்றங் கண்டவுடன், படை படையாகவந்து வட்டமிடும் கழுகுகளின் கூட்டம் களிப்பையா தரும்? பயங்கரத்தை ஊட்டும். இருட்டியவுடன் பாழடைந்த மண்டபங்களில் அடைந்துகிடக்கும் வெளவால்கள் இங்கு மங்கும் ஓடும். வல்லூறுகள் வேட்டை, புறாக்களுக்கு இனிப்பு எப்படித் தரமுடியும்? அர்த்த இராத்திரியில் ஆந்தை அலறும், வெறுத்தொதுக்குவோம். விரும்பிக் கேட்கமாட்டோம். கர்த்தப சத்தம் காதைக் குடையும். நரிகளின் ஊளையிடும் ஓசை சிந்தையைக் கூடத் தொடும்.

ஆம், அதுபோலவே போர் அரவங் கேட்டவுடனேயே, இலாபவேட்டை என்ற படமெடுத்துக் கள்ளமார்க்கட் கருநாகங்கள் ஆடத் தொடங்கிவிட்டன. போரின் பிணவாடையைக் கண்ட 'கருப்புச் சந்தைக் கழுகுகள் கொண்டாட்டம் போட ஆரம்பித்து விட்டன. வந்து விட்டது சமயம், வழுக்கி விழாதே, வந்தவரை வாரிக்கட்டு என்று வணிக வெளவால்கள் வட்டமிடுகின்றன. வர்த்தக வல்லூறுகள் திருட்டு வியாபார வானத்திலே உயரப் பறக்கின்றன. அதிக இலாபமடிக்க நினைக்கும் வியாபார ஆந்தைகளின் அலறல், கள்ள வணிக கர்த்தப சத்தம் கேட்கச் சகிக்கவில்லை. நல்ல சந்தர்ப்பம், நழுவவிடாதே, நன்றாகக் கொள்ளையடி என்றிடும் நயவஞ்சக நரிகளின் ஊளைச்சத்தம் ஊர் மக்களின் செவிகளில் படுகிறது, நன்றாக,—தெளிவாக!

X X X

கொரியாவிலே போர் என்றவுடன் இந்தக் கள்ளமார்க்கட் கழுகுகள் குதூகலித்திருக்கின்றன. "என்தன் வலது தோளும், கண்ணும் துடிப்பதென்ன, இன்பம் வருகுது என்று சொல், சொல், போரே" என்று 'கிளிக்கண்ணி' பாடிவிட்டனர். அவர்கள் தங்கள் களிப்புக் கொண்டாட்டத்தை நாடெங்கும், வீடெங்கும் நடத்திவிட்டனர். அங்கங்கே அன்றாடத் தேவைக்கான பொருள்களைப் பதுக்கிவிட்டனர். இருக்கும் பொருள்களின் விலையையும் வரவரக் கூட்டிக் கொண்டேபோய்விட்டனர். மக்களின் தேவையை விரிவாக்கி, பொருள்களின் விநியோகத்தைச் சுருக்கிவிட்டனர்.

இந்தியத் தொழில் மந்திரி. சனாப் ஹரிகிருஷ்ண மெஹ்தாப் இந்தக் கழுகுகள் திருவிழாவைக் கண்டித்துள்ளார் அவர்களின் கண்ணியமற்ற போக்கைத் தாக்கியுள்ளார்.

பல இடங்களிலிருந்து சர்க்காருக்குத் தகவல்கள் வந்தவண்ணமே உள்ளன. கடந்த சில வாரங்களில் பல பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி அதிகரிப்பதற்குக் காரணமே இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

மந்திரியார் சிந்தித்தார். இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் என்னவென்று! அவரே பிறகு சொல்லியும் விட்டார்.

ஒரு சிலர் சமூக நன்மைக்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதனால் தான் என்று உண்மையைக் கூறிவிட்டார்.

அந்த ஒரு சிலர் யார் என்று அவர் குறிப்பிடவில்லை. வர்த்தக சமூகத்தில் அழுகிய பகுதியைச் சேர்ந்தவர்கள். சமூக நன்மைக்கு எதிரிகள் மட்டுமல்ல அவர்கள், சமூகத் துரோகிகள்! அவர்களின் துரோக நடவடிக்கையின் நச்சு வாடை அடிக்க அடிக்க வார்த்தைகள் தடிக்கின்றன, தாக்கத் துடிக்கின்றன, சமூக நலத்தில் கண்ணும் கருத்துமாக உள்ளவர்களின் நா, பேனா—மற்றும் எல்லாம்! கருநாகம், கழுகு, வல்லூறு, வெளவால், ஆந்தை, கர்த்தபம், நரி...... என்று வேக வேகமாக வார்த்தைகள் வெளியிலோடி வருகின்றன.

மெஹ்தாப் மேலும் அந்தக் கழுகுக் குணத்தவரைக் கேட்டுள்ளார், தங்களுக்கு உதவும்படி! விலைவாசி அதிகரிப்பைத் தடுக்கும் விஷயத்தில் வர்த்தக சமூகத்தினர் தங்களுடைய பூரண செல்வாக்கை உபயோகிக்க வேண்டுமாம்—விலைவாசிகளை நியாயமான முறையில் நிர்ணயிப்பதற்கு அவர்கள் உதவி செய்ய வேண்டுமாம்—தங்கள் சமூக புல்லுருவிகளின் பொல்லாங்குச் செயல்கள் இல்லாமல் போக எல்லா வேலைகளையும் செய்ய வேண்டுமாம்—கோட்டானிடம், குரலினிமையை எதிர்பார்க்கிறார். மலக் குழியிலிருந்து மலர் மணம் வேண்டும் என்கிறார். கிடைக்காத பொருளை, இல்லாதவனிடம், வேண்டாத பாதையில் போய், வீணான மொழிகளால் கேட்கிறார் மந்திரியார்.

அவர் கடைசியாக மிரட்டுதலையும் ஏவிவிட்டுத்தான் ஓய்கிறார். இந்த விஷயத்தில் சம்மந்தப்பட்டவர்களுக்குக் கடுமையாக எச்சரித்துள்ளார். என்ன நடந்தபோதிலும் விலைவாசி அதிகரிப்பை சர்க்கார் அனுமதிக்கப் போவதில்லை. இதற்காக மனக்கசப்பை அளிக்கும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். அந்த நிலை ஏற்படாமல் இருக்கச் செய்வது வர்த்தக சமூகத்தின் புத்திசாலிகளின் கடமை என்று கூறியுள்ளார்.

வர்த்தகர்கள் அத்தனை பேரும் வாழ்வுறிஞ்சிகள் என்று யாரும் சொல்லமாட்டார்கள். இதயமிழந்த பிறகே, தராசும், எடைக்கற்களும் ஏந்துகிறார்கள் என்றும் கூறமுடியாது. மனச்சாட்சியை மாளச் செய்துவிட்டுத்தான், கொத்துச் சாவியுடன், இரும்புப் பெட்டியடியில் உட்காருகின்றனர் என்றும் எவரும் முடிவுசெய்து விடவில்லை. நல்லவர்கள் உண்டு. கண்ணியவான்கள் இல்லாமல் போகவில்லை. எனினும் அவர்கள் எண்ணிக்கையில் குறைவு—வணிக வளத்திலும், அவர்கள் நிலை, மட்டந்தான்! அதனால் கழுகுகள் திருவிழாவினைத் தடுத்து நிறுத்த இந்த வணிகக் கண்ணியவான்களால் முடியாது.

மெஹ்தாப், கள்ள வணிகத்தால், தங்களைக் கோடீஸ்வரர்களாக மாற்ற முனைகிறார்கள் குள்ளநரிப்புத்திக்காரர்கள் சிலர் என்கிறார். ஆனால் அந்தச் சிலர் இப்பொழுதே, பலம் பொருந்தியவர்களாக இருப்பதால்தான் துணிந்து இந்தச் சமூக துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பணத்தால், பதவியும், பதவியால், பாதுகாப்பும், பாதுகாப்பால் பக்குவமான பொருள்களின் பதுக்கலும், பதுக்கி வைத்ததால், விலை கூட்டலும் ஏற்பட அவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

X X X

இந்தக் கருப்புச் சந்தைக் கழுகுகள் நமக்குப் புதியவர்களுமல்ல, நாடாள வந்திருப்போருக்குத் தெரியாதவர்களுமல்ல! முகம் அறிந்தவர்கள்மட்டுமல்ல, மிக மிக வேண்டியவர்கள், ஒரு வகையில்மட்டுமல்ல, பலவகைகளில்!

சில திங்களுக்கு முன்னால் இந்தக் கழுகுகளின் 'புகழ்' பாடி நின்றார், பண்டித நேரு! தூற்றல் அகாரதியைத் துருவித் துருவிப்பார்த்து, அனல் வார்த்தைகளில் அர்ச்சித்தார்! கள்ளமார்க்கெட் வியாபாரம் செய்வோர் துரோகிகள் என்றார், துன்மார்க்கர்கள் அவர்கள் என்று கூவினார், உரத்தகுரலில் — துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யக்கிளம்பிவிட்டேன் என்று சென்ற விடமெங்கும், இந்தக் கழுகுகளின் 'ஒழுக்கங் கெட்டபோக்கைக் கண்டபடி தாக்கினார். அது மட்டுமா? தூக்கிலே மாட்டுவேன், கழுத்திலே கயிற்றைக்கட்டி ஊஞ்சலாட்டுவேன் என்று கடுமையாகவே பேசினார்.

ஆனால் என்ன நடந்தது கடைசியில்—அவர் அமெரிக்கா செல்லுமுன், கள்ள வணிகர்களோடு கொஞ்சிக்குலவுவதுபோல்பேசினார். தூக்குக்கயிறு போன இடந்தெரியவில்லை. கெஞ்சு மொழிகளைத் தூதனுப்பினார். கருப்புச்சந்தைக் கனவான்களே, கள்ளமார்க்கெட் சீமான்களே, வருமானக் கணக்கை மட்டும் காண்பித்துவிடுங்கள், சர்க்கார் வாயில் மட்டும் மண்ணைப்போடாமல் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிடுங்கள் என்றுகெஞ்சினார். யார்? பண்டித நேரு, நாட்டின் பிரதம மந்திரி—எதையும் செய்யும் வல்லமை உள்ளவர்.

அவர்கள் சிலர் என்று சொல்கிறார் மெஹ்தாப். அந்தச்சிலர், பிரதமரையே பேதலிக்க வைத்துவிட்டார்கள், அவர்களுக்குப் பணிய வைத்துவிட்டார்கள் என்பதை நினைத்தாலே, அந்தச்சிலர் சாமான்யர்கள் அல்ல, சர்க்காரையே சரியச்செய்யவும் சக்தியுள்ளவர்கள் என்பதுபுரியும்.

X X X

*கல்கத்தாவில், கொரியா யுத்தம் ஆரம்பமானவுடன் வாசனை சாமான்கள், ஜவ்வரிசி, கற்பூரம் முதலிய பொருள்களின் விலைகள் விஷம்போல் ஏறிவிற்க ஆரம்பிக்கப்பட்டன. இந்த அகாத விலைகள் ஏறிக்கொண்டே போவதைத் தடுக்கப் போலீசார் வாசனை சாமான் கடைகளைச் சோதனை செய்து 60 மொத்த, சில்லரை வியாபாரிகளைக் கைது செய்தனர்.*

இந்தச் செய்தியைக் காணும்பொழுது சர்க்காரின் விலைகளின் ஏற்றத்தடுப்பு நடவடிக்கை மிகத்தீவிரமாக இருக்கிறது என்று சொல்லிடத் தோன்றும். அப்படிக் காரியத்தில் கடுமையைக் கலக்காவிட்டால், நிலைமை சீர்படாது என்பதும் முழுக்க முழுக்க உண்மை!

இந்த நடவடிக்கையான பிறகு வர்த்தகர்களும், சர்க்காரும் கலந்துபேசி அதிகப்பட்ட விலை நிர்ணயிப்பை ஒருவாறு நிச்சயித்துக்கொண்டனர். அதன்படி முன்விலைகளைவிட 5 சதவிகிதம் அதிகமானாலும், இனியும் உயராது என்று மக்கள் நம்பும்படி ஒப்பந்தம் செய்துள்ளனர். மகிழ்ச்சிதான், கழுகுகளின் முழுஒத்துழைப்பும் இருக்குமானால்!

கொரியா யுத்தத்தைச் சாக்கிட்டு கொள்ளை இலாபமடித்து வருவதை நிறுத்தும்படி, வர்த்தகர்களாகிய உங்களைக்கேட்டுக் கொள்ளுகிறோம். சமூக விரோதமான இந்தச் செய்கையைக் கைவிடாமற்போனால் அவர்களின் கடைகளுக்கு எதிரில் ஊழியர்களைக்கொண்டு மறியல் நடத்துவோம். சமுகத்திலேயே இடம்பெற அருகதையற்ற பேராசை பிடித்த கொள்ளை இலாபக்காரர்கள் மக்களைச் சுரண்டுவதைத்தடுக்க ஆட்சியாளர் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கல்கத்தா பிரபல காங்கிரஸ் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

மெஹ்தாப் சொல்கிற சிலரின் நடவடிக்கையை நிறுத்த மறியல் நடத்துவோம் என்று கூறவேண்டிய அளவு அவர்கள் வலுப்பெற்றுள்ளார்கள்—தங்கள் நிலைமையை வளர்த்தும் வருகிறார்கள்!

X X X

அத்தியாவசியமான பண்டங்களின் விலைகள் விஷம் போல ஏறிக்கொண்டே போகின்றன. இதற்குக் காரணங்கள் என்ன? போர் வந்துவிட்டது. இனிப் பொருள் தட்டுப்பாடு ஏற்படும். அதனைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற கள்ள நினைப்பு—வர்த்தக சமூகத்ினர் நாணயமற்ற போக்கு—சூதாட்டப் பேரங்களினால் தங்கள் சுய உயர்விலே கண்ணுங் கருத்துமாக உள்ளவர்களின் லீலைகள் — ஆனால வியாபாரிகளிடையே பரவியுள்ள பதுக்கல் மனப்பான்மையும், கொள்ளை இலாபப் பேராசையும் இவைகளில் தலைமை வகிக்கின்றன!—இப்படிக் காரணப் பட்டியலை நீட்டுவர். இவை மட்டும் காரணமாகிவிட முடியாது. இந்தக் கள்ள மார்க்கட் கழுகுகளின் மனத் துணிவு—என்பதையும் இணைத்துக் கொள்ளவேண்டும். அந்த நெஞ்சுரம் எப்படி வந்தது? அதனை நினைத்துப் பார்க்கவேண்டும்.

அவர்கள் அதிகாரிகளை அலட்சியமாக நினைக்கின்றனர். ஆட்சியாளர் சீறிடும் நாகம் போல இருப்பரே என்றால், எங்களிடம் பண மகுடி இருக்கவே இருக்கிறது என்று கேலியாகப் பேசுகின்றனர். எதையும் தாங்கும் வலிமையை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம்-புதிய காய கல்பம் புசித்து விட்டோம்!—அதோ பாருங்கள் கொடி, இதோ பாருங்கள் கதர்ச் சட்டையென்று கூறிவிடுகின்றனர். இந்தச் சூழ்நிலை தான் அவர்களுக்குத் துணிவைத் தருகிறது!

இந்நிலையில் சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய சர்க்கார், உறுப்பு இராஜ்யங்களுக்கு இது சம்மந்தமாக தாக்கீது அனுப்பியிருக்கிறது—அப்பொழுதுள்ள நிலவரங்களுக்குத் தவக்கமின்றித் தகவல்கள் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது'

(அடுத்த பக்கம் பார்க்க)


## தேன் கூடு

—திங்கள் இதழ்—

வழிப்போக்கன்
அதோராள்
நல்லை. அ. இளங்கோவன்
புத்தனேரி. ரா. வேங்கடாசலம்.

மற்றும் பலரின் கதை, கவிதை, கட்டுரைகளுடன் ஆகஸ்ட் இதழ் 10ம்-நாள் வருகிறது. தனி இதழ் 2 அணா.

ஆண்டு சந்தா ரூ. 1—8—0.

ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:—
7, வெண்கலக்கடை முதல்தெரு,
AVT. மதுரை.

# பட்டேல் பம்பாய் பயணம்!

அசிங்கமான போட்டி கூடாது, அவசியமற்ற பணச் செலவும் ஆகாது காங்கிரஸ் தலைவர் தேர்தலில்!

சென்ற தேர்தலின்போது போட்டா போட்டியில் கலந்து கொள்வதில்லையென்று ஒப்புக்குச் சொன்னார்கள் பெருந்தலைவர்கள்—ஆனால் அதில் நேரடியான அக்கரை காட்டினர்.

வெளிப்படையாகவே, பதவிப்போட்டியிலீடுபட்டனர்—இது இரகசியம் அல்ல!

இரு பொதுக் காரியதரிசிகளுமே, கட்சி சேர்த்துக்கொண்டதாகவும், இதன் காரணமாகப் போட்டியிட்ட தலைவர்கள் தாங்களாகவும், தங்கள் நண்பர்கள் மூலமாகவும் பணம் செலவழிக்க நேரிட்டது.

தேசம் சுதந்திரம் அடைவதற்குமுன்னர் காங்கிரஸ் தலைமைப்பதவி மிகவும் உன்னதமாகக் கருதப்பட்டது. இப்பொழுது அதன் மகத்துவம் குறைந்துவிட்டது.

காங்கிரஸ் கொள்கைகள் அடிக்கடி மாறுகின்றன. சிலசமயங்களில் அவை நடைமுறைக்கு வரும்பொழுது உருத்தெரியாமல் போய்விடுகின்றன.

காங்கிரசின் பிரபல தலைவர்கள், யார் தலைவர் என்று சொல்லிவிடவேண்டும். அவர்கள் நடுநிலைமை வகிக்கவேண்டும். செயலிலும் அந்தரங்க சுத்தியுடனிருக்கவேண்டும்.

பேசுவது, நாம் அல்ல, காங்கிரசின் முன்னாள் தலைவர், ஆச்சார்யா கிருபளானி. அவர்தான் இப்படி அடுக்கடுக்கான உண்மைகளை அள்ளித் தருகிறார் — அவசரத்திலோ, ஆத்திரத்திலோ, ஆர அமர யோசிக்காமலோ அல்ல! சிந்தித்து, இனி நடக்க இருக்கும் நாசிக்காங்கிரஸ் தலைவர் தேர்தல் எப்படியிருக்கவேண்டும் என்று திட்டவட்டமாகத் தன்கருத்தைத் தெரிவிக்கையில், கூறுகிறார் இப்படி!

அசிங்கமான போட்டிகூடாது என்கிறார், காங்கிரசில் — ஆம், அவர் உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார். போட்டி வலுத்துவிட்டது இப்பொழுது, காரணம், எதுவாக இருப்பினும்—அப்போட்டி முன்னர்போல் தியாகம் புரியவோ, விடுதலைப் போர் நடத்தவோ, அல்ல என்பதுமட்டும் உண்மை. போட்டி, பணத்திற்கும் வேலை கொடுக்கிறது என்கிறார். இப்படிக் காங்கிரசில் இடம் பிடிக்க—அடம் செய்கிறார்கள்! ஏன்?

அதுவும், சாதாரண கொடி தூக்கிக் குப்பனும், குமரனுமல்ல! பெருந் தலைவர்களே அப்படிப் போட்டியிட்டனர். பெருந் தலைவர் பதவிக்கு இத்தனை அமர்க்களமும் நடத்தினர். கிருபளானி சொல்கிறார், தன் அனுபவத்தின் துணையோடு!—சென்ற ஆண்டு நடந்த நிகழ்ச்சியை ஆதாரமாகக் காட்டி—ஆள் சேர்த்ததை, பணம் பறந்ததை, பதவிப்போட்டிக்காகப் படைதிரட்டியதை—எல்லாவற்றையும் மீண்டும் நினைவு படுத்தி! பகிரங்கமாகவே, தலைமைப் பதவிக்கு அடித்துக் கொண்டனர் என்கிறார்.

புனிதம் போய்விட்டது—உன்னதத்தன்மை மறைந்துவிட்டது, காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு, இப்பொழுது—சுதந்திரம் வந்த பிறகு—ஆனால் அதன் பிறகுதான் போட்டியும் வலுத்துவிட்டது. இது கூடாது என்கிறார், முன்னாள் தலைவர்.

காங்கிரஸ் கொள்கைகள் காற்றில் பறக்கவிடப் படுகின்றன, காங்கிரஸ் தலைவர்களால் என்று கடிந்து கொள்கிறார்.

இதற்கு அவர், தலைவர் தேர்தலில் போட்டி கூடாது என்று அறிவுரை கூறுகிறார். ஆனால் அவர் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து நடக்கப் போகிறார்களா, என்பது தான் கேள்வி—ஆவலோடு எதிர்பார்ப்பது—போட்டி நிற்காது, பூசல் ஒழியாது, காய்ச்சல் ஓயாது!

காங்கிரஸ், ஊழல் புரியாகி விட்டது, உத்தமர்கள் ஒதுங்கிக் கொண்டனர், நல்லவர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர், இப்பொழுதோ பதவி வெறியர்கள் கூடிக் கொண்டனர்—ஆகவே தான் போட்டி வலுக்கிறது, பொல்லாங்கு வளர்கிறது என்று சொல்லாமலே விளங்கும்.

*   *   *

பட்டேல் வந்தார் சென்னைக்கு—வந்த வேலையிலே தோல்வி கண்டார் வருத்தம் பின் தொடர, வேதனை துணைவரப் பயணமானார், பம்பாய்க்கு!

ஆந்திரக் காங்கிரசிலே ஏற்பட்டுள்ள வேற்றுமையைப் போக்க வந்தார்—தனக்குத் தெரிந்தவரை, முடிந்த அளவு சமரச முயற்சி புரிந்தார்—முடியவில்லை— வாட்டத்தோடு திரும்பினார். பயன் ஏதும் காணாது, பம்பாய்க்குப் பயணமானார்.

ஆச்சார்யா கிருபளானி, காங்கிரசின் தலைமைப் பதவிக்குப் போட்டி கூடாது என்று அறிவுரை வழங்கினார். ஆனால் ஆந்திராவிலே சாதாரண பஞ்சாயத்து தேர்தலிலே தகராறு—கட்சி கட்டினர் — பிளவைப் பெருக்கினர் — பட்டேல் வந்தார். வந்தும் பயனில்லை என்று திரும்பி விட்டார்.

எதிர்ப்புக் கோஷ்டிகளைக் கண்டு பேசினர். இரு தரப்பினர் தந்த செய்திகளையெல்லாம் அலசினார்—ஆராய்ந்தார்! கிழக்குக் கோதாவரி, குண்டூர், கிருஷ்ணா, சென்னை, சித்தூர், கடப்பை, கர்நூல், நெல்லூர், அனந்தப்பூர் முதலிய தகராறு பிரதேசங்களிலுள்ள தலைவர்களோடு அந்தரங்கமாகப் பேசினார்—பேசினார், ஆனால் முடிவு, முறிவுதான்!

பெருந்தலைவர் பதவிக்கு மட்டுமல்ல, சின்னஞ் சிறு பஞ்சாயத்து உறுப்பினர் பதவிக்குக் கூட இவ்வளவு உக்கிரமான போட்டி! ஆம், அது தான் விசித்திரம் — காங்கிரசை ஆதிக்கபுரியென்று எண்ணுகின்றனர்—அது உண்மையுங் கூட!

"என் சைக்கிளைக் கொஞ்சம் ரிப்பேர் செய்து தரியாப்பா" என்றான் சைக்கிள்கார சங்கரன்.

"என்ன ரிப்பேர்?" என்றான், ரிப்பேர் ஷாப் ரங்கன். (5-ம் பக்கம் பார்க்க)

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கழுகுகள் திருவிழா—போர் வந்துவிட்டால் பெரு விழாவாக மாறிவிடும். போர் மட்டுமல்ல, பரபரப்பான நிகழ்ச்சி எது நடந்தாலும், அதனைப் பயன்படுத்திக் களிப்புக்கூத்தே ஆடிவிடுவார்கள்!

வணிக சமுதாயம், தங்களிடையில் இத்தகைய கழுகுகளின் நடமாட்டம் இருப்பது அவமானம் என்று நினைக்காவிட்டாலும், அபாயம் என்றெண்ணியாவது, அவர்களின் கும்மாளத்தை நிறுத்த முனைய வேண்டும். சர்க்கார் அத்தகைய பயம் வரும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

வியாபாரிகள் தாங்கள் தனிஇனம் என்று எண்ணிக்கொண்டு தறுதலையாட்டம் போடுவது கூடாது. அவர்கள் சமுகத்தின் நாடி நரம்புகளைப் போல - அவைகளில் நியாய விலை, நீதியான விநியோகம் ஓடவேண்டும், நல்ல இரத்தம் பாய்ந்தோடுவதைப் போல! நஞ்சு கலந்துவிடக் கூடாது, பதுக்கல், அதிக இலாபம் போன்றவைகள் மூலம்!

போர்ப் பீதி ஏற்பட்டால் அதைத் தடுக்க வேண்டும் அவர்கள்! இலாபங் கூடாது என்று கூறவில்லை. கனம் முன்ஷி கூறுவது போல இலாபமடிப்பது குரூரமானது, மகா பாவமானது, மக்களைப் பட்டினி போடச் செய்யும் துரோகமானது என்று கூடப் பேசவேண்டியதில்லை. மனிதாபிமானத்தை எண்ணியாவது கழுகுப் போக்கை நிறுத்தி, கண்ணியமிக்க ஒழுங்கு நோக்கை மேற்கொள்ள வேண்டும் அவர்கள்—ஆட்சியாளர் அந்த நிலை பிறக்கச் செய்ய ஆவனவற்றைத் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் கழுகுகள் திருவிழா தீராது—நீடிக்கும், வேடிக்கையும், வேறு பல விழா நடவடிக்கைகளும் இரட்டிக்கும்!

*

---

# 'வேதாளம்,' மீண்டும்மரமேறுகிறது!

## வாபஸ் பெற்ற வழக்கின்மேல் மீண்டும் விசாரணை!!

### சிவசாமி, தங்கப்பழம்மீது ஆளவந்தார் அம்புகள்!

வில்க்ஸ் என்றவர் மீது ஒருமுறை — இருமுறை—பல முறை வழக்குப் பதிவு செய்தனர்—ஆனால், அவர் மீண்டும், மீண்டும்வெற்றி பெற்றார், ஆளவந்தார் அவமானத்தை அணைத்துக்கொண்டனர்.

இது, ஆங்கிலச் சரித்திரத்திலே ஒரு ருசிகர தகவல்—

இதோ, நம்ம சர்க்காரும் தொடர்கின்றனர், விட்ட வழக்கை, தள்ளுபடி செய்த வழக்கை! 'சவுக்கடி' என்ற நூலை எழுதிய சிவசாமி, வெளியிட்ட தங்கப்பழம் ஆகியோர் மீது வழக்கு நடந்தது. வழக்குத் தள்ளுபடி செய்தாகிவிட்டது என்று அறிவித்தனர், கடைசியில்! தவறைத் திருத்திக்கொண்ட பெருந் தன்மையைத் தமிழகம் பாராட்டிற்று.

ஆனால், திடீரென்று, மீண்டும், சர்க்காரின் 'சம்மன்' நம் தோழர்களின் வீட்டுக் கதவைத் தட்டிற்று—ஏன் என்று அவர்களுக்குப் புரியவில்லை. நீதி மன்றம் சென்றனர், உண்மை நிலையறிய! தவறுதலாகத்தள்ளுபடிசெய்யப்பட்டுவிட்டதாம் வழக்கு, தன் கீழ் வேலை செய்வோரின் கவனக் குறைவால் அப்படி உத்தரவு பிறப்பித்துவிட்டாராம் —அது Clerical Mistake—ஆம்! ஆகவே, விட்ட வழக்குத் தொடர்ந்து நடைபெறும் — அறிவித்துவிட்டார் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்.

புதை குழியைத் தோண்டுகிறது சர்க்கார், என்ன விசித்திரம்! வாபஸ் பெற்ற வழக்கை மீண்டும் வலுவில் நடத்த முனைந்து விட்டனர் ஆட்சியாளர்!

எழுத்துரிமை என்று பேசிப் பேசி இன்று ஆட்சிப் பீடமேறிய காங்கிரஸ் சர்க்கார் எடுத்ததற்கெல்லாம் தடையும், மறுப்பும் தந்து ஆதிக்கக் கூத்தாடுகிறது – தன் பழைய கதையை மறந்து! 'சவுக்கடி' என்ற நூலை எழுதியதற்காகவும், வெளியிட்டதற்காகவும் வழக்குத் தொடுத்தது—சரி—தொடர்ந்து நடத்தியது — அது கூடத் தவறில்லை. எல்லாம் முடிந்து, வழக்கு வாபஸ் பெற்ற பிறகும், விசித்திரக் காரணங்காட்டி, மீண்டும் தொடங்கியிருக்கிறது, வழக்கை என்ற சேதி கேட்டதும் வேதனை பிறக்கிறது, நாட்டு நலம் விரும்பிகளுக்கு!

ஆங்கில வரலாற்றில் முடிமீட்சி நடந்த பிறகு, க்ராம்வெலின் எலும்புக்கூட்டையும் தேடி எடுத்துத் தூக்கிலிட்டுத் திருப்தி தேடினாராமே, அதுபோல, விட்ட வழக்கையும் மீண்டும் நடத்தித் தங்கள் வீராப்பை நிலைநாட்ட பார்க்கிறதா சர்க்கார்—நீதி ஓடி ஒளிந்து விட்டதா? நேர்மை மடிந்து மறைந்து விட்டதா? நமக்குப் புரியவில்லை.

அவர்கள் பணியாளர்கள் தவறு செய்துவிட்டார்களாம்—ஏன்? அந்தத் தவறையும் ஏற்றுக்கொண்டு, வழக்கை வாபஸ் பெறலாமா? நிர்வாகத்தின் பூரணத்துவத்தின் பொலிவு தெரிகிறது, வெகுதெளிவாக! ஆட்சியாளரின் திறம் நமக்குத் திட்டவட்டமாகப் புரிகிறது, மிக நன்றாக!

மீண்டும் தொடங்கிய வழக்கை, அதே நீதி மன்றத்தில் நடத்தக் கூடாது என்று தடை உத்தரவு—Stay order—வாங்கிச் சென்னைக்கு அப்பீல் செய்துள்ளனர், வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள்.

விட்டு விட்டு வழக்கு போடட்டும்—வில்க்ஸ் நிலை பிறக்கட்டும், தோழர்களுக்கு! ஆனால், வாபஸ் பெற்ற வழக்கை வலுவில்லாத காரணங்காட்டி நடத்துவது விசித்திரம் — புரியாத புதிர்—விடுவிக்க முடியாத விடுகதையாக இருக்கிறது!

'சவுக்கடி' வழக்கு, உண்மையில் ஆட்சியாளர் கூறும் காரணத்தால் தள்ளப்பட்டிருந்தால், அவர்களின் நிர்வாக வழுவுக்கு ஒரு சவுக்கடி என்றே கூறவேண்டும்.

வழக்கு நடக்கட்டும்—தீர்ப்புத் தரட்டும்—அதுபற்றியகவலை நமக்கில்லை. அதனை எதிர்த்தோ, ஏளனப்படுத்தியோ பேச நேரமில்லை — ஆனால் வாபஸ் பெற்ற வழக்கை மீண்டும் தொடங்கி நடத்துகிறார்களே—இதைக்கண்டு நீதி சிரிக்கிறது! காலம் காத்திருக்கிறது, தன்கடமையைச் செய்ய—அதை நினைவூட்டுகிறோம்.

# திராவிடநாடு

ஞாயிறு] 6—8—50 [காஞ்சி


## எழுச்சி முரசு

சிங்கங்கள் சிந்து பாடத் துவங்கிவிட்டனர்! வந்து வீழ்ந்த சட்டியை எடுத்தெறிவோம்—என்று எக்காளமிடத் துவங்கிவிட்டனர் மாணவர்கள்! சென்னையில் இந்தவாரம் முகிழ்த்திருக்கும் மாணவர் கிளர்ச்சி மகத்தானது—கொடுமையைச் சாய்க்க இந்நாட்டின் வருங்கால மணிகள் தயங்கார் என்பதை எடுத்துக்காட்டும் உன்னதக் காட்சி.

வகுப்புவாரி பிரதிநிதித்வ முறைக்கு வந்த 'கதி' குறித்து, மாணவருலகிலே ஏற்பட்டிருக்கும் கலக்கத்தின் எதிரொலியே சென்னை மாணவர் முழக்கம். 'வகுப்புநீதிவேண்டும்! 'சர்க்காரே தயங்காதே!' 'அரசியலமைப்பைத் திருத்து' என்ற வெற்றிக் கோஷங்களோடு வெய்யிலையும், பசியையும் பொருட்படுத்தாத அமைதியான முறையிலே தங்களின் அதிருப்தியையும் கண்டனத்தையும் காட்டிக்கொண்டிருக்கின்றனர்.

மாணவர்கள்—எதிர்காலத் திராவிடத்தின் மறுமலர்ச்சித் தூதுவர்கள்! ஆனால், அவர்களின் வருங்காலமோ—வகுப்பு நீதிமீது வீசப்பட்ட சட்டியால் பயங்கரமாக்கப் பட்டிருக்கிறது. எதிர்பாராத, இந்த இடியோசையின் விளைவினையுணர்ந்து 'வேதனை போக்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று அவர்கள் எழுப்பிய எக்காளம் — திராவிடத்தின் விழிப்புக்கோர் எடுத்துக்காட்டு. ஆளவந்தாருக்கோர் அறைகூவல்!

பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து, பொங்கியெழும் வீர உணர்ச்சியையடக்கி, அமைதியோடு தங்கள் ஆசையைத் தெரிவித்துக் கொண்ட சென்னை மாணவர்கள் எல்லோரின் பாராட்டுக்கும் உரியவர்கள். சென்னையைப் போலவே, நாட்டின் நாலு பக்கங்களிலுமுள்ள மாணவர்களின் எழுச்சி முரசு ஒலிக்குமென்று நம்புகிறோம்!

மாணவருலகு—தங்கட்கு ஏற்பட்டிருக்கும் தீங்கினை எண்ணி விழித்துவிட்டது! "எழுங்கள் பெரியோரே! ஏதாவது செய்வீர் ஆளவந்தாரே!" என்று வேண்டுகோளைத் தெரிவித்துவிட்டது.

வகுப்பு நீதி கிடைப்பதற்கான வழிவகைகள் காணப்படவில்லையென்றால் திராவிட சமுதாயம் தேய்ந்த நிலவாகி விடும்—திசை கெட்டு வாழ்வு இழந்து, மரணக் குழிக்கு வந்துவிடும்! ஆகவே, வகுப்பு நீதியை நிலைநாட்டுவதற்கான வழி வகைகள் காணப்படவேண்டும் இதில் கட்சி மாச்சரியமோ, கருத்து வேறுபாடோ பார்ப்பனரல்லாத மக்களிடையில் இருக்கமுடியாது ஆகவே, பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களும் பெரியோரும், ஏதாவது வழி வகை காணவேண்டும் — இந்த நேரத்தை விணாக்கிவிட்டால், பின்னர் இந்நாட்டுப் பெரும்பான்மைச் சமுதாயம் வீணரின் விளையாட்டுக் கூடம் ஆகிவிடும்!

ஆகவே, ஆளவந்தாரும், அவரைச் சார்ந்தோரும் உடனடிக் கவனம் செலுத்தவேண்டுமென வலியுறுத்துகிறோம். அரசியலமைப்பைத் திருத்தியோ அல்லது வேறு வகையிலோ, எது சாத்யமோ, அவ்வழியில் இந்த 'அநீதி' களையப்படவேண்டும்! இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, இந்நாட்டுப் பெருங்குடி மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

பெரியோரையும், ஆளும் கட்சியினரையும் தூண்டும் வகையில் துடித்துக் கிளம்பி, தங்கள் அதிருப்தி அலையோசையைக் காட்டிக்கொண்ட மாணவ மணிகளுக்கு நமது பாராட்டைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாடெங்குமுள்ள மாணவர்கள், மக்கள் மன்றத்தில், இது குறித்து கிளர்ச்சி எழும் வகையில் தங்கள் அதிருப்தி அலையோசையைத் தெரிவிப்பது — பயன்தரக் கூடியதாகும்.

"சந்தர்ப்பம் நழுவினால் பின் சாக்காடுதான், நமக்கு!" இந்த உண்மை, நாடெங்கும் முழங்கப்படவேண்டும். மக்கள் மன்றத்திலேற்படும் மன மாறுதல், எத்தகைய சர்க்காரையும் மண்டியிடத்தான் செய்யும். ஆகவே, மக்களிடை தங்கள் அதிருப்தி அலையோசைமூலம் விழிப்பை யூட்ட முனைந்த மாணவருலகை மீண்டுமொரு முறை வாழ்த்துவதோடு — நாடெங்கும் இந்த முழக்கம் எதிரொலிக்கட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்!

## 'தகுதி'படும் பாட்டைக் காணீர்!

### 'அவர்கள்' ஆதிபத்தியத்தின் காட்சி!!

'தகுதி'யைமட்டுமே பார்க்கவேண்டுமென்று கூச்சல்போட்டு வகுப்புவாரி பிரதிநிதித்துவ சமநீதிமுறையைக் கல்லறைக்கு அனுப்பிவிட்டனர் 'கல்வி ஏகாதிபத்ய' வாசிகள். ஆனால்அந்தத் 'தகுதி' எத்தகைய அலங்கோலத்துக்கு ஆளாகிறது என்பதை விளக்கும் சம்பவம் இது. இதில் சம்பந்தப்பட்ட சீனிவாசன்—மத்திய சர்க்கார் மந்திரியான சந்தானம் அய்யங்காரின் உறவினராம். உறவினரையும், வேண்டியவர்களையும், உயர்த்துவதில் அவர்கள் எவ்வளவு 'வெறி''யோடு நடந்துகொள்கிறார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டாகும். இது குறித்து ஆங்கில இதழ்களான சுதந்திரா' 'சண்டேஅப்சர்வர்' ஆகிய பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. கீழே நாம் தருவது 'பிரசண்ட விகடன்' எழுதியிருப்பதாகும்:—

"ஸ்ரீ சீனிவாசன் என்ற பெயருடைய ஒருவர் நம் மாகாணத்தில் உள்ள வேலூரில, முனிசிபல் என்ஜினீயராக இருந்து வந்தார். இவர் பதவியில் இருக்கும்போது, தம் கடமை யுணர்ச்சியை மறந்து சில காரியங்கள் செய்திருக்கிறார் என்பதாக முனிசிபல் பதிவுப் புத்தகங்களில் எழுதப் பட்டிருக்கிறது. அதாவது நாலாம் தர என்ஜினீயராக நியமனம் பெற்றிருக்கிறார். இவருக்கு முன்பே பலர் அப்பதவிக்குரிய யோக்கியதாம்சங்களுடன் வேலை பார்த்து வரும்போது, அவர்களுக்கு நியாயப்படி கொடுக்கப்பட வேண்டிய பதவிஉயர்வு கொடுக்கப்படாது, இவருக்கு மட்டும் கொடுக்கபபட்டிருக்கிறது. இவர், வேலையிலும் கூட, அவ்வளவு திறமை காட்டவில்லை என்று, இவர் தம் இலாகா அதிகாரிகளே குறித்திருக்கின்றனர் என்றும் சொல்லப்படுகிறது. அப்படியிருந்தும் கூட, இவர் உதவி என்ஜினீயராக (Asst. Engineer) உயர்த்தப்பட்டிருக்கிறார். மேலும் அரசாங்கச் செலவிலே கல்கத்தாவில் உள்ள ஓர் சுகாதாரக் கல்லூரியில் பயிற்சிபெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டு, படித்தும் வந்திருக்கிறார். இவரைவிட அதிகமாக படித்தவர்களும் திறமை மிக்கவர்களும் போட்டியிட்டும் கூட, இவரேதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். மேலும் இவர் இந்திய அரசாங்கச் செலவில் அமெரிக்காவில் மூன்று ஆண்டுகள் தங்கிப் பயிற்சி பெறவும் சிபார்சு செய்யப்பட்டிருந்தார். புது டெல்லியில் இது சம்பந்தமான பேட்டிக்கு இவர் போயிருந்தபோது, ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் குழுவினர், இவர் தகுதி குறைந்தவர் என்று மதிப்பிட்டனர். ஆனாலும், இக் குழுவினருக்கு உயர்ந்த இடத்திலிருந்து நெருக்குதல் வரவே, முதலில் ஆட்சேபணை செய்த கருத்துக்களை காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள். ஸ்ரீ சீனிவாசன், இப்போது அமெரிக்காவுக்குப் போகவேண்டியதாகும். ஆனால், அவர் இதற்குள்ளாக ஏங்கேயோ மறைந்துவிட்டார். கடந்த 5 வாரங்களாக அவர் இருப்பிடம் தெரியவில்லை. இவர் இரயில்வே உதவி மந்திரி ஸ்ரீ சந்தானத்தின் மருமகராவர். இவருக்காக ஸ்ரீ சந்தானம் தம் உயர் பதவியையும், அதன் மூலம் உள்ள செல்வாக்கையும் உபயோகப்படுத்தி இருக்கிறார் என்று 'ஸ்வதந்திரா' பத்திரிகையே கூறுகிறது. இவ்வித நிலையில், மந்திரி ஒருவர் தம் பொறுப்பை உணராமல், வகுப்பு உணர்ச்சி கொண்டு காரியம் செய்திருப்பது சிறிதுகூட நேர்மையானதல்ல. இவ்விதம் நடப்பதற்குப் பெயர் என்ன?"

—⊛—

## அறப்போருக்கு ஆயிரக் கணக்கில் உளோம்!

### அறியட்டும் ஆளவந்தார்; அழிக்கட்டும் அநீதியை

### சென்னையில் பொதுக் கூட்டம்

தூற்றல் விடவில்லை! எனினும் கூட்டம் அசையவில்லை! இருபதினாயிரத்துக்குமேற்பட்டுக் குழுமி நின்ற எல்லோரும் வீரஉணர்ச்சியுடன் குழுமிக்கிடந்தனர். 'வீழ்த்தப்பட்டுவிட்டோமே—விலாவெலும்பு முறிந்துவிட்டதே! என் செய்வோம்! என்ன செய்யவேண்டும்' என்று கேட்பது போல, எல்லோர் முகங்களும், சோகத்தையும் கவலையையும் காட்டிக்கொண்டிருந்தன.

சமுக நீதியைக் காத்து நிற்கவேண்டியஅவசியத்தைஎடுத்துக்கூறி,சமுகநீதிச்சட்டத்தின்தந்தையான எஸ். முத்தையா அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித்தருமாறு சென்னை திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் கோவிந்தசாமி கேட்டுக்கொள்ள, தோழர் கே. எ. மதியழகன் வழிமொழிய, 2—8—50 அன்று மாலை சென்னை வண்ணையம்பதி ராபின்சன்பார்க்கில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சர் எஸ். மூத்தையா தலைமை தாங்கினார். அவர் பேசுகையில்,

கம்யூனல் ஜி. ஓ. கொண்டு வந்தபோதே அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பையும், அதற்காகஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் ஆற்றிய தொண்டையும் குறிப்பிட்டு, இன்று காங்கிரஸ்காரரும் அந்தச் சட்டத்தின் பயனை அறிவார்கள் என்றும்,எனவே—கட்சி வேறுபாடின்றி, ஒன்றுபட்டு, எல்லோருமாகக் கிளர்ச்சி செய்தேனும், அந்தச்சட்டத்தை மறுபடியும் நிலைநாட்டவேண்டுமென விளக்கிப் பேசினார்.

அடுத்துப் பேசிய பாரிஸ்டர் ரங்கராமானுஜம் அவர்கள் தகுதிதிறமை என்றுபேசி இந்தச்சூழ்ச்சி செய்யப்பட்டுள்ளதென்றும், பரீட்சையிலே வாங்கும் மார்க்குகள்மட்டும் ஒருவரின் தகுதியைக் காட்டாதென்றும், மார்க்குகளேகூட, சிலசமுகத்தினருக்கு சிபார்சு செய்தே பெற வாய்ப்புள்ளதென்றும், மாணவர்கள் சமுகநிலை காரணமாக — பலதரத்திலே இருக்கும்போது, அவர்கள் அனைவருக்கும், ஒரே அளவு மார்க்கைத் தகுதியாகக்கொண்டு பார்ப்பது முறையல்லவென்றும், இந்திய அரசியல் சட்டத்தில் முதல் பகுதியில் தலைப்பிலேயே சொல்லப்பட்டுள்ள, சமூகநீதி,நிலைநாட்டப்படவேண்டுமானால், "கம்யூனல் ஜி. ஓ.வை" மறுபடியும் நிலைநாட்டத்தான் வேண்டும் எனவும்—அதற்காகப் பொது மக்கள் அயராது பாடுபடவேண்டுமென்றும் விளக்கினார்கள்.

இறுதியாகப்பேசிய தோழர் அண்ணாதுரை அவர்கள், மிகவும் விரிவானதோர் சொற்பொழிவில், தலைவர் முத்தையா அவர்கள் அண்மையில்—சமூகநீதியை நிலைநாட்ட ஒரு சர்வகட்சி மாநாடு கூடிடவேண்டுமெனவும், அதில் தலைவர்கள் பலரும் பங்குகொண்டு பணியாற்ற முன்வர வேண்டும் எனவும், அம்மாநாடு தீர்மானிக்கும் முறையில் அறப்போர் தொடுக்க, தனது முன்னேற்றக் கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கிலே தயாராக உள்ளனர். எனினும் அரசாங்கம் இதை அறிந்து, நீதியைக்காத்து—நிலைபெற வழிதேடட்டும்எனவும்முழக்கினார்.பலதடவை—மழைகுறுக்கிட்டும்—மக்கள் மழையை மறந்து,மறவர்களென சமுகநீதி பறிபோயிற்றே என்ற கொதிப்பிலே சூழ்ந்துகிடந்தனர்.

எங்கும் வீரமும் வேகமுமே நிறைந்துகிடந்தன! எல்லோர் இதயத்திலும் எத்தகைய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சென்னைக்கூட்டம் விளக்கிற்று. கூட்டமுடிவில், 'சமூகநீதி ஓங்குக!' என்ற முழக்கம், அடிக்கடி எழும்பிக்கொண்டிருந்த இடியையும் மீறி எழும்பியது—திராவிடச் சமுதாயம் தன்மீது வீசப்பட்ட கொடுங்கோலம்பைத் தாங்காது—தடுத்து முறிக்கும் என்று எச்சரிப்பதுபோலிருந்தது!

(நிருபர்)

**திருச்சியில் பொதுக் கூட்டம்**

**6—8—50 ஞாயிறு மாலை**

**திருச்சி டவுன் ஹால் முன்**

**சி. என். அண்ணாதுரை**

**பேசுவார்**

**திருச்சி. தி. மு. க.**

# புலிநிகர் மாணவர் புறப்பட்டார்!

## சென்னைக் கல்லூரிகளில் சிம்மநாதம்

---

## எழுச்சியுலகின் எக்காளம்—வகுப்பு நீதி கோரி முரசொலி!

கடந்த கிழமை, 'கம்யூனல் ஜி. ஓ.' குறித்து உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைக் கேட்டு, சென்னை நகரம் முழுவதுமே பெரும் அதிர்ச்சிக்கு ஆளாயிற்று. மாணவர்கள், வியாபாரிகள், அரசாங்க அலுவலாளர்கள், ஆசிரியர்கள், ஆகிய பல துறைகளைச் சார்ந்த பொதுமக்களும், மறுபடியும் 'கம்யூனல் ஜி. ஓ,' நிலைநாட்டப்படவேண்டும் என்ற எழுச்சியோடு கூடிக் கூடிப் பேசிய வண்ணமிருந்தனர். இதன் எதிரொலியாக, கல்லூரி மாணவர்களெல்லாம் கம்யூனல் ஜி. ஓ.வை எப்பாடுபட்டேனும் நிலைநாட்டவேண்டும் என்று கருதுவதை அரசாங்கத்திற்கு அறிவுறுத்தக் கருதி, தீவிர முயற்சிகளில் ஈடுபட்டனர்.

முதன் முதலாக, 31—7—50 திங்களன்று காலை, சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள், வேலை நிறுத்தம் செய்தனர். கல்லூரிக்கு வந்த மாணவர்களும் ஆசிரியர்களும், வேலை நிறுத்தத்தைத் தொடங்கிய பெருவாரியான மாணவர்களின் உணர்ச்சிக்கும், உரிமை எழுச்சிக்கும் மதிப்பளித்து ஆதரவு தந்தனர். மாணவர்கள் எல்லோருமே, ஓர் பொதுக்கூட்டம் நடத்தி கம்யூனல் ஜி. ஓ.வை மறுபடியும் நிலைநாட்டவேண்டுமென, ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய பின், தங்கள் கருத்தையும் உறுதியையும் ஊராள்வோரை உணரச் செய்வதற்காக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள், ஊர்வலமாகப் புறப்பட்டனர்,

"Retain Communal G. O."
"We want Social Justice"
"Appeal to the Supreme Court"
"Amend the Constitution"
"சமூக நீதி ஓங்குக"
"வகுப்புவாரி உத்தரவை நிலைநாட்டுக"

என்ற முழக்கங்கள் வானமளாவ, கைகளிலே கருத்து விளக்க அட்டைகளோடு அணிவகுத்து, பூந்தமல்லி ஹைரோடு வழியாக நடந்து, டாக்டர் நாயர் ரோடு வழியாகத் திரும்பினர், இடையில் போலீஸ் அதிகாரிகள் அனுமதியின்றி ஊர்வலம் நடத்தக்கூடாது என்று தடுத்ததன்பேரில், மறுநாள் ஊர்வலம் நடத்த அனுமதி பெற்று, மாணவர்கள், அமைதியோடு, ஆனால் குன்றாத உணர்ச்சியோடு கலைந்து சென்றனர்.

அன்று இரவே—நகரம் முழுவதும்-பச்சையப்பன் கல்லூரி மாணவர் வேலை நிறுத்தம், செய்தித் தாள்களின்மூலம் காட்டுத் தீயெனப் பரவியது. மறுநாள் நடத்த இருந்த ஊர்வலம் குறித்தும், பொதுமக்கள் பேசியவண்ணமிருந்தனர்.

1—8—50 செவ்வாய் காலை 11 மணிக்கு இரண்டாவது நாளும், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அத்துடன் வேறு பல கல்லூரி மாணவர்களும் கலந்துகொண்டதால், ஒரு பெரும் மாணவர் ஊர்வலம் பச்சையப்பன் கல்லூரியில் தொடங்கி, பூந்தமல்லி ஹைரோடு, டாக்டர் நாயர் ரோடு, சிந்தாதிரிப்பேட்டை, மவுண்ட் ரோடு, வாலாஜா ரோடு, பைக்கிராப்ட்ஸ் ரோடு ஆகியவற்றின் வழியாக, திருவல்லிக்கேணி கடற்கரையை பகல் 1 மணிக்கு சென்று அடைந்தது, மாணவர்களின் எழுச்சியையும் உணர்ச்சியையும், நாடறியச்செய்யும் விதத்தில் அவ் வூர்வலம் அமைந்தது. கொதிக்கும் தார்ச் சாலைவழி, கடுமையான கதிரவனின் வெப்பத்தையும் பொருட்படுத்தாது, கல்லூரியிலே சொகுசாக வாழ்வு நடாத்தும் இளைஞர்கள் ஈராயிரத்துக்கு மேற்பட்டவர் இடி முழக்கமென ஒலித்தபடி, ஐந்து மைல்களுக்கு மேல் நடந்துவந்த காட்சி, கல்நெஞ்சினரையும் கலங்கச்செய்யும்வண்ணமாக இருந்தது. விழிப்புற்ற இனத்தின் எழுச்சிபெற்ற தூதர்களாக அவர்கள் அணிவகுத்த காட்சி, கிளம்பிற்றுகாண் தமிழர் சிங்கக் கூட்டம், கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை, என்ற புரட்சிக் கவிதையை நினைப்பூட்டத் தவறவில்லை.

அத்தகைய உறுதிகொண்ட இளைஞர்கள், அவ்வளவு உணர்ச்சி வயப்பட்டிருந்த நேரத்திலும், எந்த விதத்திலும், சட்டத்தின் கட்டுப்பாட்டை மீறாமல் நடந்துகொண்டதைப் பாராட்டாத அதிகாரிகளில்லை.

கடற்கரையை அடைந்த காளைகள், அந்தக் கடும் வெய்யிலிலும், பகல் பட்டினியோடும், தலைவர்களுக்காகச் சிறிது காத்திருந்தனர். சமூக நீதியை சட்டப்படி நிலைநாட்டிய செம்மல், முன்னாள் அமைச்சர், முத்தையா அவர்களும் அண்ணாதுரை அவர்களும் வந்தபோது எழுப்பிய வாழ்த்தொலிகள் அலையோசைஎன எழும்பின.

பகல் 2-மணிக்குத் தொடங்கிய அக்கூட்டத்தில், மாணவர்மணி தலைமை தாங்கப் பல கல்லூரிப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு வீர உரை நிகழ்த்தினார்கள்.

மாணவர்களின் — நோக்கத்தை விளக்கும் முறையில், "பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கெல்லாம், சமூக நீதி வழங்க, கல்வித்துறையிலே இடம்பெற வாய்ப்பளித்து வந்த, சமூக நீதிக் காப்புச்சட்டமாகிய, கம்யூனல் ஜி. ஓ" பற்றிய உயர்நீதி மன்றத் தீப்பைக்கேட்டு, மாணவர் உலகமே வருந்துவதோடு, அந்தச் சமூகநீதிக் காப்புச் சட்டத்தை நிலைநாட்ட, சுப்ரீம் கோர்ட்டுக்கு அரசாங்கம் அப்பீல் செய்ய வேண்டுமெனவும், அங்கும் சட்டம் இடந்தராவிடில், அரசியல் சட்டத்தையே மாற்றியமைக்க வேண்டுமெனவும், இந்த நகரக்கல்லூரி மாணவர்களின் கூட்டம் அரசாங்கத்தை வற்புறுத்துகிறது" என்ற தீர்மானத்தை, பெருத்த கையொலியோடு நிறைவேற்றினர்.

தீர்மானத்தை ஒட்டித் தோழர் K. A. மதியழகன் பேசினார்.

### முன்னாள் அமைச்சர் முத்தையா

அடுத்து முன்னாள் அமைச்சர் முத்தையா அவர்கள் பேசுகையில், கடந்த முப்பது ஆண்டுகளாக, பிற்படுத்தப்பட்ட வகுப்பார் சிறிதேனும் முன்னேற உதவிவந்த இந்தச் சட்டத்தை நீக்கிவிட்டால்—மறுபடியும் என்றென்றும் நம் சமூகம் அடிமைகளாகவே இருக்க நேரிடும் எனவும், எனவே மாணவர்கள் விழிப்போடு பணியாற்ற வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

### முன்னாள் மேயர் இராதாகிருஷ்ணன்

அடுத்துப் பேசிய முன்னாள் மேயர் இராதாகிருஷ்ணபிள்ளை அவர்கள், 'கம்யூனல்' ஜி. ஓ.வினால்தான் இந்த அளவாவது—பார்ப்பனரல்லாத மக்கள் முன்னேற்றமடைந்துள்ளனர் என்றும், தற்கால அரசியல் சட்டம் அதை அனுமதிக்காவிடில் — அரசியல் சட்டத்தை திருத்தவும் அரசாங்கம் முன்வரவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

### 'விந்தலை' குருசாமி முழக்கம்

பின்னர், தோழர் S. குருசாமி அவர்கள் வீரமுழக்கம் செய்கையில் — இன்றுள்ள அரசாங்கத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டு ஆதரிக்கப்பட்ட—இந்தக் கம்யூனல் ஜி. ஓ. செல்லதக்கதல்ல என்ற தீர்ப்பு கிடைத்தும், இன்னும், பதவியைவிட்டு விலகாமல் அமைச்சர்கள், அதையே பெரிதெனக் கருதியிருப்பது வெட்கப்படத்தக்கது என்றும், இவர்கள் ராஜினமா செய்தால்தான்—மத்திய அரசாங்கம் இதன் அவசியத்தை உணர்ந்து, இந்த சட்டம் நிலைநாட்டப்பட இடம் தரும் என்றும் கூறினார்.

அடுத்து, தோழர் அன்பழகன் பேசுகையில் மாணவர்கள்தான் வருங்கால அமைச்சர்கள் என்றும், அவர்களுடைய ஒன்றுபட்ட எண்ணத்தை எதிர்க்கக்கூடிய சக்தி வேறில்லை என்பதை உணர்ந்து, அரசாங்கம் உடனடியாக—சமூகநீதிக் காப்புச் சட்டத்தை நிலைநாட்டவேண்டுமெனவும், தவறினால்—இதன் விளைவாக வகுப்புத் துவேஷமும், குரோதமும் வளர ஏதுவாகும் எனவும் எச்சரித்தார்.

அடுத்துப்பேசிய தோழர் சாரி என்ற பிராமண மாணவர், அரசாங்கத்தின் எதேச்சாதிகாரப் போக்கையும, கல்வித் துறையிலும் ஜனநாயகமற்ற தன்மையையுமே, கம்யூனல் ஜி. ஓ.வை ஒழிக்கும் போக்கு காட்டுகிறதென உணர்ச்சியோடு பேசினார்.

அடுத்து, தோழர் சி. என். அண்ணாதுரை பேசினார். (பேச்சின் பகுதி வேறிடத்தில் தரப்பட்டிருக்கிறது) இடையே மழை பெய்துங்கூட அந்த மாபெருங் கூட்டம் சிறிதும் கலையாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது. இறுதியில் தலைவர் முடிவுரையோடும், மாணவர் நன்றியுரையோடும் பகல் 4-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

### கலைக் கல்லூரியில்

3—8—50 வியாழன் காலை 9-30 மணிக்கெல்லாம், அரசினர்க் கலைக் கல்லூரி (மவுண்ட் ரோடு) மாணவர்கள், கம்யூனல் ஜி. ஓ. செல்லத்தக்கதல்ல என்ற தீர்ப்பைக் குறித்து, வருத்தம் தெரிவிக்கும் முறையில் வேலை நிறுத்தம் செய்தனர். கல்லூரிக்கு வந்த மாணவர்களெல்லாம் வேலை நிறுத்தத்தைத் தொடங்கிய மாணவர்களோடு சேர்ந்துகொண்டனர்.

வேலை நிறுத்தம் மிகவும் அமைதியான முறையில், ஆனால் இலட்சிய முழக்கங்களோடு நடைபெற்றது. சுமார் 11 மணிக்கு மாணவர்கள் ஓர் பொதுக்கூட்டம் கூடி. சிலர் பேசிய பின் கம்யூனல் ஜி.ஓ.வை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினர். தீர்மானத்திற்குப் பின் மாணவர்கள் வீடு திரும்பினர்.

பார்ப்பன மாணவர்கள்மட்டுமே வகுப்புகளிலே இருந்தனர். அதிலும் சமஸ்கிருத வகுப்பே நடைபெற்றது என்று வேலை நிறுத்தம் செய்த மாணவர்கள் கூறிச் சென்றனர்.

"பார்ப்பன மாணவர்கள் எப்படியப்பா வேலை நிறுத்தம் செய்வர், நமக்குத்தானே இனி கல்லூரிகளிலே இடம் இல்லை" என்று திராவிட மாணவர்கள் பேசிச் சென்றது பரிதாபமாகத்தான் இருந்தது. என்றாலும் அவர்களின் உணர்ச்சி பரவுகிறது—பரவியவண்ணமிருக்கிறது.

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

---

"இரண்டு சக்கரங்களுமில்லே, செட்டில்லே, …………" என்று முடிப்பதற்குள் ரங்கன் சொன்னான், "அப்போ, புதுசா ஒரு சைக்கிள் வாங்கி விடலாமே!" என்று!

காங்கிரஸ் அப்படித்தானாகி விட்டது—'ரிப்பேர்' செய்ய முடியாததாகிவிட்டது—இருந்தும் முயற்சி செய்கிறார்கள். ஆகவேதான் தோல்வி காண்கிறார்கள். பட்டீல் பம்பாய்க்குக் கிளம்புகிறார், பயன் காணாத நிலையில்!

பாடத் தெரியாதென்றால், இரவல் குரல் தருகிறார்கள், பேச்சுக்கும் பின்னாலிருந்தே பேசவும் வசதி தந்துவிடுகிறார்கள், நடிக்கவும் தெரியாது, தோற்றமும் விகாரம்—என்றால் என்ன செய்வது? அந்தச் சினிமா சிங்காரியை வீட்டிற்குத்தானே அனுப்பவேண்டும். அப்படித்தான் காங்கிரஸ் — இன்று காட்சியளிக்கிறது.

காங்கிரசிலே உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டிச் சோககீதம் பாடுகிறார் ஆச்சார்ய கிருபளானி. ஆந்திரப் பிரதேசக் காங்கிரஸிலே உள்ளக் கொந்தளிப்பையடக்கிட வந்தார் பட்டீல். தோல்வியைத் தழுவி, முடிவுகூறாமல், புறப்பட்டுச்சென்றார், பம்பாய்க்கு!

ஆம், இனிக் காலங்கடந்துபோன காங்கிரசுக்கு, முட்டுக்கொடுத்து நிற்கவைக்க முனைபவர்கள் பட்டீலாக வேண்டியதுதான் — பரிதாபச் சித்திரமாய் பம்பாய் போகிறேன், தோல்வியோடு என்று சோகத்துடன் பேசவேண்டிவரும்.

பட்டீலின் பம்பாய் பயணம்—இனிக் காங்கிரசின் வாழ்விலே அடிக்கடி நேரும். கடைசி மூச்சு விட்டுக்கொண்டிருக்கும் நோயாளியைப் பிழைக்கச் செய்ய முனையும் டாக்டர் என்ன செய்வான்? கையை விரித்துவிட்டு, வாய்பேசாது நடப்பதுபோல, பட்டீல் பிரயாணமானார் பம்பாய்க்கு!

அழிவுப் பாதையிலே அவசர, அவசரமாகப் போய்க் கொண்டிருக்கும் காங்கிரஸ் இனி, பட்டீல் மட்டுமல்ல, பாரிலே உள்ள எவராலும் திருத்தவோ, வாழ்விக்கவோ முடியாது—பிழைக்கவும் செய்ய முடியாது!

# அவனும் மனிதன்—அறியட்டும் மந்திரியார்

பட்டினியால் செத்தது உண்மை—ஆனால் முப்பத்து மூவரல்ல, ஒருவன் — அவனும் ஒரு சாதாரண பிச்சைக்காரன்!

கனம் முன்ஷிபார் தரும் தகவல் இது—வாழ்வளிக்கப் போவதாக வாக்களித்துவிட்டு வந்த மந்திரியார் மக்களுக்குச் சொல்லும் செய்தி!

கண்ணீர் பெருகுகிறது—தொண்டையை அடைக்கிறது—உள்ளம் வீங்கி வடிகிறது, நமக்கு! —நம்மோடு வாழ்பவன், செத்துவிட்டான், சோற்றுக்கின்றி என்ற துயரச் செய்தியைக் கேட்கும் பொழுது!

உணவிலை எனும் நிலை இனியிலை எனமுரசறைவாய் என்று படிக்கின்றனர். ஒருவனுக்கு உணவில்லை யென்றால், ஜகத்தினை யழிப்போம் என்று பாடினர். இரந்து வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான் என்ற—வள்ளுவர் வாக்கை யுணர்ந்தவர்கள் என்று பேசினர் எனினும் சாகச் சொல்கிறார்கள் பட்டினியால், பசியால்!

காங்கிரசார், ஆட்சிப் பீடமேறும் முன், ஆயிரம் விடுகதைகள் போட்டனர்—ஆனால் இன்று அவர்கள் அழைத்து வந்திருப்பதோ பட்டினிச் சாவு—வெட்கம், வெட்கம்—வேதனை—வாதனை—இது வீண் சோதனை!

செத்தது உண்மை—மடிந்ததை மறுக்கவில்லை—இறந்தவர் எண்ணிக்கையில் முப்பத்து மூன்று பேரல்ல, ஒருவன்-அவன் ஒரு சாதாரண பிச்சைக்காரன்! கூறுகிறார், கனம், கொஞ்சமும் நெஞ்சில் நடுக்கமின்றி, நாவில் குளறலின்றி! எத்துணை அலட்சியம், எவ்வளவு ஆணவம்!

பிச்சைக்காரன்—அவன் பட்டினியால் செத்துவிட்டான்! அது பற்றிய கவலை வேண்டாம்—ஏன் இந்த அகம்பாவப் பேச்சு! முப்பது கோடி சனங்களின் சங்கம்—அதிலே அவனுக்கும் அங்கம் உண்டே! எல்லாரும் இந்நாட்டு மன்னர்—எனில் அவன் மட்டும் விதிவிலக்கோ? அவன் இந்திய சமூகத்தைக் கட்டி முடித்துள்ள அணுக்களில் ஒரு அணு—அனுசரிக்கவேண்டிய பெரிய அணு! அவனைப் பிச்சையெடுக்க விட்டதே, மன்னிக்க முடியாத குற்றம்—அவனைப் பட்டினியால் சாகவிட்டு, அதைப் பற்றிய பரிதாப உணர்ச்சி கூட இன்றி, கனம் பேசுவது, கொடுமை—பெருந்தவறு!

பிச்சைக்காரன்—ஆனாலும் அவன் மனிதன்! உயிர் உண்டு—உலவ கால்கள், உழைக்கக் கரங்கள், பேசவாய், சுவைக்க நா, கேட்க செவி, பார்க்க விழிகள்—எல்லாம் உண்டு; ஆடுவதும், பாடுவதும், அந்நியரின் வாசல் தேடுவதும், எல்லாம் இந்த அரைவயிற்றுக்காக, என் ஞானத்தங்கமே என்று அவன் பாடுவதிலிருந்து அவனுக்கும் வயிறு உண்டு என்பதும் உண்மை—அதை நிறைக்க, இந்த இராம ராஜ்யத்திலே, வழியில்லாமல்—வக்கின்றிச் செத்தான்—சர்க்கார் இதைக் கண்டு தலைகுனிய வேண்டியிருக்க, தருக்குடன் பேசுகிறது—செத்தது பிச்சைக்காரன் என்று பதட்டமின்றிக் கூறுகின்றார், மதிமந்திரியார்.

பீஹார் மாகாணத்தில் பட்டினிச்சாவுகள் ஏற்படுகின்றன என்ற செய்தியறிந்த அமைச்சர், ஆகாய விமானம் வழி, பாதிக்கப்பட்ட ஐந்து மாவட்டங்களையும் பார்வையிட்டார். பிறகு திரும்பினார். திரும்பி வந்த அவர் இப்படித் திருவாய் மலர்ந்தருளினார்.

'பட்டினிச் சாவுகள் வளருகின்றன, என்று சொல்வதற்கு அங்கு நிலவும் மனப் பீதிதான் காரணம். வெகுகாலத்திற்கு முன்னால் இறந்தவர்களையும், வயோதிகத்தால், மலேரியா, காலரா போன்ற வியாதிகளால் செத்து மடிந்தவர்களை, சோற்றுக்கின்றி மாண்டவர்கள் என்று சொல்கிறார்கள்' — இப்படிக் கூறுகிறார், மந்திரியார்—சரி, இதுவரை, ஆனால் அதற்கு மேல் அவர் பேசியதுதான் ஆத்திரத்தைக் கிளப்புகிறது—கனிந்த உள்ளம் படைத்தவர்களுக்கு, கண்ணீர் பீறிட்டுக்கொண்டு வருகிறது. பட்டினியால் செத்தான், ஒருவன்—அவன் பிச்சைக்காரன் என்று கூறுவதால் சமாதானம் தேடுகிறாரே, அதுவும் நெஞ்சை உறுத்துகிறது! நினைவைத் தேக்கி நிறுத்துகிறது! அவனும் மனிதன் என்பதை ஏன் மறந்தாரோ, இந்த மந்திரியார்!

* * *

திருச்சி மாவட்டத்தில் அரிசி ஸ்டாக் குறைந்துவிட்டதால் பூர்வாங்க ரேஷன் பிரதேசங்களில் பங்கீட்டில் 7 அவுன்ஸ் அரிசி பங்கு சீக்கிரத்தில் 6 அவுன்ஸாக்கப்படும்.

திருச்சி மக்களுக்கு 'தித்திக்கும்' செய்தியல்லவா, இது! நமது தேசிய சர்க்கார் தரும் கனிப்புச் செய்தி—வேதனை! திருச்சிமட்டுமல்ல, இந்தியாவின் திக்கெட்டும் இதே நிலைதான்!

ஆங்கிலேயர் பதினாறு என்றனர், பிரகாசம் காரு பன்னிரண்டு என்றார், ஓமாந்தூரார் பத்தென்றார், இப்பொழுதோ எட்டு, ஏழு, ஆறு, என்று பாடுகின்றனர். ஆளவந்திருப்போர், எதைச் செய்யாவிட்டாலும், வயிற்றுக்கு வஞ்சகம் செய்கிறார்களே, அதை எப்படிச் சகிப்பர், மக்கள்—எத்தனை நாட்களுக்குத் தாங்கமுடியும், இந்த வயிற்றுக்கொடுமையை—ஆளவந்தார்கள் அறியவேண்டும் இதனை — நிலைமை இப்படியிருக்க, மத்திய சர்க்காரின் மந்திரியார் செத்தது ஒருவன் என்று செப்புகிறார், எனினும் அவனும் மனிதன் என்பதை மறந்துவிட்டு!

x x x

மத்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்த்தபடி உதவி கிடைக்கவில்லை. கொள்முதலும் மோசமாகிவிட்டது. உ. பரி. மாவட்டங்கள் ஒத்துழைத்துத்தான் உணவு நிலையைச்சமாளிக்க உதவவேண்டும்.

சென்னை இராஜ்ய உணவு மந்திரி ரோச் விக்டோரியா, இப்படி முகாரி பாடுகிறார். ஆம், அவர்கள் அறியாததல்ல, மத்திய சர்க்கார் இப்படிக்கைவிரிப்பது முதல் தடவையுமில்லை! இவர்கள் 'அடாணா' தொடங்கினலொழிய, நாட்டின் 'மோகனம்' நிலைக்கப் போவதில்லை—எனினும் சோகக் குரலில், மத்திய சர்க்காரின் உதவி கிடைக்கவில்லை என்று கூறி நிறுத்துகிறார். ஆம், அவர்கள் உதவிசெய்யாவிட்டால், மக்கள் பட்டினி கிடந்தே செத்து மடிந்திடுவதா—அப்படிச் செத்தாலும், மத்திய சர்க்கார், மனந் துணிந்து சொல்லும், செத்தவன் பெரிய பிரபு அல்ல, ஒரு அநாமதேயம்—பிச்சைக்காரன் — என்று! அப்பொழுதும் இவர்கள் முகாரி பாடிக்கொண்டேயிருக்க வேண்டியதுதான்—வேறு வழியில்லை!

கேட்டது, வயிற்றுக்கு—அதற்குக்கூட வழி பிறக்கச் செய்யாத சர்க்கார், புது உலகத்தில் ஒரு கேலிச் சித்திரம்—அவமான உருவம்! மக்கள் படாடோப வாழ்வு கேட்கவில்லை—பட்டினியின்றி உண்ணவேண்டும் என்கின்றனர். ஆர்ப்பாட்ட புரியினராக இருக்க ஆசை கொள்ளவில்லை, அரை வயிற்றுக்காவது புசித்து, ஆவி போகாமலிருந்தால் போதும் என்கின்றனர். ஆனால் பட்டினியால் மடிகின்றனர் என்ற துக்கச் செய்தி, நம் செவியைக் குடைந்து சென்று இதயத்தைத் தாக்குகின்றது.

ஆளவந்தார், இந்தப் பயங்கர நிலையை எண்ணிப் பார்க்கவேண்டும்—அதை விடுத்து, உணவு மந்திரியார், முன்ஷி பேசுவதுபோல, வெந்த புண்ணிலே வேல் நுழைப்பதாக இருக்கக்கூடாது—சாகின்றனர் மக்கள், சோற்றுக்கின்றி! இந்தச் செய்தியைக் கேட்டும் மக்களின் உண்மையான ஆட்சியாளர் என்ன செய்வர்? அனலிலிட்ட புழுகாய்த் துடிதுடித்துப் போவர். உணவு நிலையைச் சரி செய்ய ஓடியாடி வேலை செய்வர்! செருக்குடன் பேசி, இருக்கும் வருத்தத்தை இரட்டிப்பாக்க மாட்டார்கள்.

பட்டினியால் செத்தது உண்மை—செத்தவன் பிச்சைக்காரனாக இருக்கட்டும், அல்லது பிரபல பிரபுவாக இருக்கட்டும் — மந்திரியார் என்ன செய்யவேண்டும்? அந்த இதயங் குலுக்கும் இறப்புகள் நடைபெறாது தவிர்க்க மார்க்கம் காணவேண்டும்.

செத்தான் பிச்சைக்காரன்—ஆகவே கவலை வேண்டாம் என்றால், 'பாரத மாதா'வின் மடியில் தவழ்ந்த குழந்தைகளிலே அவனும் ஒருவன்—அவனும், மந்திரியாரைப்போல ஒரு மனிதன்—முழு மனிதன் — உணர்ச்சியுள்ள மனிதன்—இந்த எண்ணிக்கை வளர்ந்தால் என்ன ஆகும்? நினைத்துப் பார்க்கவேண்டும், கனம் மந்திரியார், நேற்றுப் பட்டினிச் சாவுகள் மட்டும் நடக்க விடேன் என்று பேசியவர், கனம் முன்ஷிபார்! அவர்தான் இப்படிச் சொல்கிறார்.

*

# வெளிநாட்டிலிருந்து அரிசி—'டெல்லி சர்க்கார்' முடிவு

"வெளிநாடுகளை எதிர்பார்ப்பது, வெட்கக்கேடு! நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்ளவேண்டும். சுயதேவை பூர்த்திக்கான திட்டங்களைத் தீட்டுகிறோம்"—இது, மத்திய சர்க்கார் அடிக்கடி கூறுவதாகும்.

வெளிநாடுகளிலிருந்து எவ்வித பொருள்களையும் வரவழைக்காது இங்கேயே கிடைக்கும் பொருள்களை அதிகமாக்கி அதன் மூலம் இந்திய நாட்டினர் வாழவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வருகின்றனர். 1951-க்குள் இந்தியா தன் சுயதேவையைக் கவனித்துக் கொள்ளவேண்டும் — அதற்குமேல் எந்த நாட்டிலிருந்தும் உணவுப் பொருள் இறக்குமதி செய்யப்படப் போவதில்லை யென்றெல்லாம், திட்டம் தீட்டிவைத்திருக்கின்றனர். அத்திட்டத்தை இப்போதே அமுலாக்கி வரவேண்டுமென்ற ஆசையுடன் மத்திய சர்க்கார், வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களையும் சர்க்கரை போன்றவைகளையும் முன்புபோல இறக்குமதி செய்வதில்லை—இதன் காரணமாக தென்னாட்டினர் கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகுகிறார்கள்.

உணவுப் பொருளில் தென்னாட்டினர்க்குத் தேவையானது அரிசி. ஆனால் காலத்தின் கோலத்தால், பருவமழை குறைந்து இப்போது பஞ்சம் எங்கும் தலைகாட்டுகிறது. தென்னாட்டுக்குத் தேவையான அரிசியை—வடநாடு வழங்கிட முடியாது. ஏதோ, தந்தாலும் ஏகப்பட்ட விலை தரவேண்டியதிருக்கிறது.

இந்த இக்கட்டான நிலையை நாம் பன்முறை எடுத்துக்காட்டி வந்திருக்கிறோம்.

சுயதேவைப் பூர்த்தியென்கிற வீம்பால், தென்னாடு தொல்லைப்படுகிறது. தேவையான அரிசி கிடைக்காமல் அல்லலுக்கு ஆளாகிறது.

பக்கத்திலுள்ள சையாம், பர்மா முதலாய நாடுகளிலிருந்து—அரிசி வரவழைத்து அல்லலைத் தீர்க்கலாம். ஆனால், தற்பெருமைக்கு ஆளான இந்திய சர்க்கார், வீம்பை பெரிதென எண்ணி வேதனைக்கு உள்ளாக்குகின்றனர் நம்மை.

—என்றெல்லாம், பன்முறை எடுத்துக் காட்டிவந்துள்ளோம். நமக்குத் தேவையான அரிசியைக் கேட்டால் கோதுமையை அனுப்புகின்றனர்—இது ஏன்? என்றெல்லாம் விளக்கிவந்துள்ளோம். வீம்பை ஒதுக்கிவிட்டு, வெளிநாடுகளிலிருந்து அரிசி வரவழைத்துத் தந்தால் என்ன? —என்றும் கேட்டிருக்கிறோம்.

இப்போது, இந்திய சர்க்காரின் உணவிலாகாவிலிருந்து ஒரு தகவல் கிடைத்துள்ளது. அதன்படி பர்மா, சையாம், இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து அரிசியை வரவழைக்க முடிவு செய்திருக்கிறார்களாம்.

முடிவு—நேரங் கழித்துச் செய்யப்பட்டதுதான். எனினும் வீம்பு மாறி, விவேகம் சிறிது ஏற்பட்டிருக்கிறது ஆளவந்தாருக்கு என்பதை காட்டுகிறது. இனியும், தென்னாட்டை வடவர் கோதுமையைத் திணிக்கும் பிரதேசம் எனக் கருதாது, குறைந்த விலைக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து, பஞ்சநாதத்தை விரட்டும் வேலையில் ஈடுபடட்டும்.

தற்பெருமையும், வீம்புமல்ல பெரிது; நிலைமையைச் சமாளிக்கும் சாதுர்யமும், விவேகமும் தான் வேண்டும்.

இதாவது, ஏற்படட்டும், இந்திய ஆளவந்தாருக்கு!



# சிறுநரிக்குச் சிம்மாசனம் சிங்கத்துக்கு வெறுங்குடிசை!

## ‘மண்குடிசை’யினரிடை புயல்: ‘மார்புநூல் மரபில்’ தென்றல்!

### கல்வி ஏகாதிபத்தியம்—புள்ளிவிபரத் தகவல்

அநீதி இழைக்கப்படுவதாகக் கூச்சல் போட்டுப் புலி ஆட்டை எதிர்த்து "நீதி" பெற்றுவிட்டது. தங்கட்கு கல்வித்துறையில் அநியாயம் செய்யப் படுவதாகச் சதா ஓலமிட்டுவந்த பார்ப்பன வகுப்பினர் — பார்ப்பனரல்லாத சமுதாயத்தை எதிர்த்து, வெற்றி பெற்றுவிட்டனர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை சட்டப்படி செல்லாது என்ற தீர்ப்பைச் சென்னை உயர்நீதி மன்றத்தினரிடமிருந்து, பெற்றுவிட்டனர்—நீதி என்ற பெயரால், சட்டம் என்ற துணையுடன்.

வகுப்புவாரிநீதிக்கு ஏற்பட்ட முடிவுகண்டு தென்னாட்டுப் பெருங்குடியினர் சோகித்து, நிற்கிறார்கள் — துடித்துத் தவிக்கிறார்கள்.

கீழே—கடல், பாறையோ செங்குத்தானது, உச்சிக்கு ஏறிக்கொண்டிருப்பவனுக்குக் கிடைத்ததோ ஒரு ஆலின்விழுது, அகமகிழ்ச்சியுடன் அவனேறிச் செல்லும்போது திடீரென ஒரு கத்தி பாய்ந்து விழுதைத்துண்டாக்கினால், என்ன ஆகும்! இதே நிலையில், நமது எதிர்காலம் ஆகிவிடுமோ என்ற ஏக்கத்துடன் திராவிடப் பெருங்குடி மக்கள் திகைத்துக் கிடக்கின்றனர்.

துயரமும் சோகமும் வறுமையும் வாட்டமும் நிறைந்து தத்தளிக்கும் திராவிட சமுதாயம், மீளமுடியாத வகையில் — அதற்கென இருந்த ஒரு ஆதாரமும் டெல்லி வகுத்த இந்திய அரசியலமைப்பால் பறிக்கப்பட்டு விட்டது.

வேதனை! வேதனை!! தாங்கிக்கொள்ள முடியாத வேதனை.

இத்தகைய காட்சி, திடீரென யோசித்துச் செய்யப்பட்டதல்ல. இந்திய அரசியலமைப்பு அமைக்கப்படுமுன்னரும், பின்னரும்—வழக்குத் தொடர்ந்தபோதும் இன்று வெற்றி பெற்ற போதும் — இத்தகைய காட்சியை உருவாக்குவதற்குப் பார்ப்பனர்கள் திட்டமுடன் ஒன்று கூடி யோசித்துச் செய்த காரியங்கள் பலப் பல.

ஒரு பக்கம், பத்திரிகைகளை வைத்துக் கொண்டு பிரச்சாரப்பீரங்கிகளால் முழக்கிய வண்ணமே இருந்தனர். வட இந்தியாவுக்குச் செல்லும் போதெல்லாம், இது குறித்து, அங்கெல்லாம் பேசினர். தென்னாட்டில் பார்ப்பனர்மீது துவேஷம், சர்க்காரிடத்திலும் — காங்கிரசாரிடத்திலும் கூட உருவாகிவிட்டதென்று, கூச்சல் போட்டனர்! வடஇந்தியப் பத்திரிகைகளில் ஆசிரியப் பீடத்திலமர்ந்திருக்கும் பார்ப்பனர்கள், "சென்னை"யைக் கண்டித்து, தலையங்கங்கள் தீட்டித் தள்ளினர். மத்திய சர்க்காரில் மந்திரிகளாகப் பொறுப்பேற்ற தென்னிந்திய பார்ப்பனரும் தங்களது, ‘சத் கைங்கர்யத்தை’ச் செய்யத் தவறவில்லை.

நேருவுக்கு மகஜர் — சட்டசபையிலே பிரேரணைகள், குறுக்குக் கேள்விகள்—பத்திரிகைகளிலே கடிதங்கள், பொதுமேடைகளிலே கூச்சல்கள் — திட்டவட்டமான முறையிலே, கிளப்பப்பட்டு வந்தன.

"பிரஜா உரிமை மறுக்கப்படுகிறது—பார்ப்பனர் மீது துவேஷம் காட்டுகின்றனர் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதில்லை"—என்று, இடத்துக்கு இடம், நேரத்துக்கு நேரம் எப்படிப் பேச வேண்டுமோ அப்படியெல்லாம் பேசினர்.

தென்னிந்திய பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்தோர், இந்த வகையில் செய்து வந்த ஏற்பாடுகளைக் குறித்து, "தினசரி" கூறுகிறது—"வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்தரவு, ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு, அதாவது பிராமணர்களுக்கு, மேல்படிப்புக்கு வேண்டிய வசதியே இல்லாதபடி செய்துவிட்டது என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. கண்டவிடங்களிலெல்லாம் இதையே பெரும் புகாராகவும் சொல்லி வருகிறார்கள். சட்டசபைகளிலும், இந்தியாவில் மற்ற பகுதிகளிலும் இதைக் குறித்துப் பிரமாதமாகப் பிரசாரம் செய்தும் வருகிறார்கள். இந்திய பார்லிமெண்டிலும், சென்னை சர்க்காரின் உத்தரவைக் கண்டித்து காரசாரமாகப் பேசிவருகிறார்கள்.........

தென்னிந்தியாவில், ஏதோ அக்கிரமம் நடப்பதுபோல, அநேக பத்திரிகைகளிலுள்ள நமது தென்னிந்திய நண்பர்கள் இடைவிடாது பிரசாரம் செய்துவருகிறார்கள். ‘பிரஜா உரிமைக்கு வேண்டிய அடிப்படையான அம்சத்தையே’ சென்னை சர்க்கார் பிராமணருக்கு மறுக்கிறது என்பது, இவர்களுடைய பல்லவி" என்று, வேதனையோடு எழுதி, "இது பற்றிய சர்க்காரின் புள்ளி விபரங்களைத் திரட்டித் தந்துள்ளோம்—பாருங்கள், எந்தச் சமூகத்திற்கு நீதி கிடைக்கிறது?" என்பதாகக் கேட்டிருக்கிறது.

ஜூலை 31 (வெளியூர்) இதழ் கடைசிப் பக்கத்தில், "தினசரி" தந்திருக்கும் புள்ளி விபரப் பட்டியலைப் பார்த்தால், வெந்து மடியும் திராவிட சமுதாயத்தின் இதயம் கொந்தளிக்காமற் போகாது. அந்தப் புள்ளி விபரங்களைச் சுருக்கி, கீழே நாம் தந்திருக்கிறோம், வாசகத் தோழர்களுக்காக. அதைக் கூர்ந்து, கவனியுங்கள்—பன்முறை.

மேற்படி கணக்கு, **1949—50**-ம் ஆண்டில், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட்டது குறித்த விபரமாகும். சென்னை மாகாணத்தில் வசிக்கும் வகுப்பினரின் மொத்த மக்கள் தொகையையும் தந்துள்ளோம். அவைகளை வைத்துக்கொண்டு, பார்ப்பனருக்கும் ஏனையோருக்கும் கல்லூரிகளில் தரப்பட்டிருக்கும் இடங்களைக் காணுங்கள்.

சென்னை மாகாணத்தில் நூற்றுக்கு மூன்று பேர் கூட இல்லை, பார்ப்பனர்கள். சரியாகச் சொன்னால் 2·7 சதவிகிதத்தினரே, அவர்கள். சென்னை மாகாண ஜனத்தொகையான சுமார் நாலரை கோடியில், "அவர்கள்" தொகை 13 லட்சம்தான்!

பதின்மூன்றே லட்சம் (ஆண் பெண் உள்பட) பேர் அடங்கிய பார்ப்பன சமுதாயம் நான்கு கோடிக்கு மேற்பட்ட திராவிடப் பெருங்குடி மக்களை—நடுங்க வைக்கிறது, திகைத்துத் துடிக்கச் செய்கிறது!

13 லட்சம் மக்கள் அடங்கிய "அவர்களுக்கு", கல்லூரிகளில் கிடைத்திருக்கும் சலுகையைப் பாருங்கள்—பட்டியலில்!

| | | |
|---|---|---|
| இன்டர் மீடியட்டில் | 4422 | இடங்கள் |
| பி. ஏ. & பி. காம் | 1190 | இடங்கள் |
| பி. ஏ. ஆனர்ஸ் & பி. எஸ். ஸி. ஆனர்ஸ் | 318 | " |
| மெடிகல் | 442 | " |
| என்சீனியரிங் | 198 | " |

இந்தப் புள்ளி விபரத்தோடு சற்றேறக்குறைய பிராமணரல்லாதாரான 3½ கோடி மக்களுக்கு கல்லூரிகளில் வழங்கப்பட்டிருக்கும் இடத்தினையும் காணுங்கள்.

| | |
|---|---|
| இன்டர் | 6542 |
| பி. ஏ. & பி. காம் | 1273 |
| பி. ஏ. ஆனர்ஸ் & பி. எஸ். ஸி. ஆனர்ஸ் | 206 |
| மெடிகல் | 827 |
| என்சீனியரிங் | 389 |

பார்த்தீர்களா? மனம் பதறுகிறதா — கொஞ்சம் தாங்கிக்கொண்டு, மேற்கொண்டும் பட்டியலைப் பாருங்கள். 80 லட்சம் பேர்கள் அடங்கிய ஆதித்திராவிடப் பெருங்குடி மக்களுக்குக் கிடைத்திருக்கும் இடங்களைப் பாருங்கள்! 39 லட்சம் மக்கள் தொகையடங்கிய முஸ்லிம் மக்களுக்கு கிடைத்திருக்கும் மொத்த இடங்கள், 19 லட்சம் போரகிய கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் இடம், எல்லாவற்றையும், காணுங்கள்!

கண்ணில் நீர் ததும்பும்—சிறிது கவலையோடு பட்டியலை ஒப்பிட்டுப் பார்த்தால் இதயம் துடிக்கும், எண்ணங்கள் "வெறி" கொள்ளும்! பதின்மூன்றே லட்சம் பார்ப்பனர்தான்—ஆனால், அவர்கள், சமுதாயத்தை வாழ்விக்கும் கல்வித் துறையில் வகிக்கும் இடம்? ஐயகோ! பதில், கண்ணீராகத்தான் வெளிப்படுகிறது

இது "நீதி"யில்லையாம் — "சட்டத்துக்கு" விரோதமாம் — சல்லடம் கட்டி, வெற்றி பெற்றிருக்கின்றனர், ‘சாணக்கிய மரபினர்!’

நூற்றுக்கு 2½ பேர்! அவர்களுக்கு எவ்வளவு போகபோக்கியம்!!

நூற்றுக்கு 97 பேர்—திராவிடமக்கள்! அவர்களுக்கு எவ்வளவு வேதனையான வாழ்வு!!

நினைக்க நினைக்க நெஞ்சம் குமுறும், நிலைகெட்ட நமது வாழ்வை எண்ணக் கண்ணீர் வடியும்!

இருந்தும், ‘பிரஜா உரிமை’யின் பெயர் சொல்லி, வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையைப் பிணக்குழிக்கு அனுப்பியிருக்கின்றனர், வசதியும், சந்தர்ப்பமும் தங்கள் பக்கமிருப்பதால்.

பி. எஸ். ஸி. ஆனர்ஸ்—விஞ்ஞானத் துறையில் கைதேர்ந்தவர்களாக மாணவர்களை ஆக்குவிக்கும் படிப்பு அதில் 13-லட்சம் போராக இருப்போருக்கு 318-இடங்கள்! 3½-கோடி மக்களுக்கு 206 இடங்கள்!!

சிறு நரிக்கு சிம்மாசனம்! சிங்கத்துக்கு வெறுங்குடிசை!!

வேடிக்கையான காட்சி இருந்தும் இவர்கள் "நீதி" கோரி வெற்றி கண்டுவிட்டனர், "நியாயம்" கிடைக்கவில்லையென்று கூவி தீர்ப்பு பெற்று விட்டனர்!

தீர்ப்பு—சட்டஷரத்தின் மீது கூறப்பட்டதாகும். இந்திய அரசியலமைப்பு ஷரத்தைத்தான் வழக்கு போட்டோரும் எடுத்துக் காட்டினர்—தீர்ப்புக் கூறியோரும் அதை வைத்தே, தீர்ப்புத் தந்திருக்கின்றனர்.

வழக்கு தொடர்ந்து, ஆட்சியாளரை எதிர்த்து வம்பு செய்யும் அளவுக்குச் சென்ற

(8-ம் பக்கம் பார்க்க)

| வகுப்பினர் | மொத்த தொகை | இன்டர்மீடியட் | பி. ஏ. & பி. காம் | பி. ஏ. ஆனர்ஸ் | மெடிகல் | இன்ஜினியரிங் |
|---|---|---|---|---|---|---|
| பார்ப்பனர் | 13 இலட்சம் | 4422 | 1190 | 318 | 442 | 198 |
| பார்ப்பனரல்லாதார் | 3½ கோடி | 6542 | 1273 | 206 | 827 | 389 |
| ஆதித்திராவிடர் | 80 இலட்சம் | 277 | 40 | 5 | 27 | 1 |
| முஸ்லீம் | 39 இலட்சம் | 530 | 117 | 17 | 140 | 7 |
| கிருஸ்தவர் | 19 இலட்சம் | 1346 | 365 | 110 | 299 | 3 |

7-ம் பக்கத் தொடர்ச்சி

"இவர்கள்" எந்த அளவில் நாட்டின் துறைகளைத் தங்கள் கைப்பிடிக்குள் வைத்திருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்தால் இன்னும் வேதனையான விபரங்கள் கிடைக்கும்.

இருந்தும் ஏதோ 'ஏதுவுமில்லாதவர்கள்' போலக் கூக்குரலெழுப்பி, தங்கள் குரல் கனத்தால், இந் நாட்டுக்குரியோர் வாழ்வில் நடுக்கத்தைச் சிருஷ்டித்து விட்டனர்.

கல்லூரிகளில் அவர்களுக்குப் போதுமான இடம் தரப்படவில்லை என்பதுதான் இவர்களது கூக்குரல்.

இது, எவ்வளவு தூரம் உண்மையென்பதை இப்புள்ளி விபரம் காட்டும். எனினும், 'இவர்கள்' தங்கள் ஏகாதிபத்யம் விரியவேண்டும் என்று ஆசைப்படுகின்றனர்—அதற்கான வழிவகைகளையும் காணுகின்றனர்.

புது ஏகாதிபத்யம் — புறப்படுகிறது, 'நீதி'யின் பெயரைச் சொல்லிக்கொண்டு, வாழ்விழந்து, திசை கெட்டுக் கலங்கி நிற்கும் திராவிட சமூகத்தைத் தங்கள் சேவைக்கான 'தாஸனு'க்கும் நோக்குடன்.

நினைத்தால், வேதனை அலை அலையாய் மோதுகிறது! நம் சிந்தையெலாம் தடுமாறுகிறது! சீர் கெட்ட தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்காலம் இருட் குகையாகி விடுமோ என்ற அறிகுறி தென்படுகிறது!

வேதனையான காட்சி — எந்த நாட்டிலும் காணமுடியாத காட்சி. சகிக்க முடியாத காட்சி. நாட்டின் மாணிக்கங்கள் போன்ற உழைப்போர் வாழ்வில், மூட நம்பிக்கையும், அறியாமையும் நீடிக்கச் செய்யும் சதி வெற்றி பெறுகிறது!

ஆனால், நேர்மையும் நீதியும் —'சட்டத்தால்' புறமுதுகிடுகின்றன. இத்தக் கேடுகெட்ட நிலையைக் காணும்போது, புரட்சிக் கவிஞரின் வார்த்தைகள் தான் நினைவுக்கு வருகின்றன—

பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடையதாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின்றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக்கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?

✲

## நடக்க இருப்பவை

குன்றை

6—8—50 ஞாயிறு மாலை 3 மணிக்கு ஜவஹர் பேட்டையில் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் டி. கே. சீனுவாசன் பேசுவார்.

இடைப்பாடி

12—8—50 சனி மாலை 6 மணிக்கு ஆரம்ப பாடசாலை முன் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி ஆகியோர் பேசுவர்.

குடியேற்றம்

13—8—50 ஞாயிறு மாலை 6 மணிக்கு ஆற்றங்கரையில் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன், ப. துரையரசன், ஜகதீசன் ஆகியோர் பேசுவர்.

## பொன்மலை வழக்கு

பொன்மலை திராவிட வாலிபர் கழகத்திற்கு சில சமூகவிரோதிகள் கொடுத்த தொந்தரவின் காரணமாக, பொன்மலை போலீசார் தொடுத்த கி. பி. கோ. 145 வழக்கு இன்று திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடவடிக்கைக்கு வந்தது. கழ தரப்பில வக்கீலாக திருச்சி கையிலை ஆனந்தர், வைத்திலிங்கம் ஆகியவர்கள் ஆஜரானார்கள். எதிரி தரப்பில் சுப்பையா தேவரின் ஜூனியர் வக்கீல் ஆஜராகி ஒத்திக் கேட்டதின் பேரில் ஆகஸ்டு மாதம் 10—8—50 திருச்சி தாலுக்கா பட்டவர்த்தலையில் மேற்படி வழக்கு ஒத்திப் போடப் பட்டிருக்கிறது என்று கழகச் செயலாளர் எ. கோவிந்தசாமி தெரிவிக்கிறார்.

1-ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் பேசியபோது, "இது திடீர் நிகழ்ச்சி அல்லவென்றும், நீண்ட நாளாகவே கட்டுப்பாட்டோடும் சூழ்ச்சியோடும் செய்யப்பட்ட ராஜதந்திரம் என்றும், இதை ஆதரிக்கச் சட்டம் இருக்கிறது என்றும், அந்தச் சட்டத்தை மாற்ற நமக்கு உரிமை இருக்கிறது என்றும், மக்கள் எல்லோரும் சமத்துவமாக வாழ வழி செய்வதற்குத்தான், சட்டமும் நீதி மன்றமும் தேவை என்றும், மக்கள் மன்றத்தின் தீர்ப்பு — சட்ட மன்றத்தின் தீர்ப்பையும் மாற்றும் வலியுடையதென்றும், மாணவர்கள், நல்லறிவு பெற்றவர்களாகையால், அவர்கள், சமூக நீதியை நிலைநாட்ட எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதோடு, மாணவர்களின் எழுச்சியையும் பாராட்டி, தொடர்ந்து பணியாற்றக் கேட்டுக்கொண்டார். (கிருபா)

## வட ஆற்காடு மாவட்டத் தோழர்களுக்கு!

மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழு 6-8-50 ஞாயிறு அன்று மாலை 3 மணிக்கு ஆரணி கணேசர் ரேடியோ நிலையத்தில் கூடுவதால் அன்று மாநாட்டு வரவு செலவு கணக்கு பரிசீலனை செய்யப்படும். ஆகையால் மாநாட்டு வரவேற்புக் குழுவினர் யாவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாய் மிக பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம்.

அதோடு, மாநாடு டிக்கட்டுகள் விற்பனைக்குப் பெற்ற சில தோழர்கள் விற்ற டிக்கட்டின் ரூபாயும் மீதி டிக்கட்டையும் சரிவர அனுப்பாமல் இருப்பதனால் வரவு செலவுக் கணக்குப் பரிசீலனை செய்ய முடியாமலிருக்கிறது. வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெறுமுன் இது குறித்து சம்பந்தப்பட்ட தோழர்கள் மீதி டிக்கட்டையும் பணத்தையும் அனுப்பிவைக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறோம் என ஆரணி மாநாட்டு வ. க. தலைவர் கே. பி. சுந்தரம், செயலாளர் பி. பாலகிருட்டிணன் ஆகியோர் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

# நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

# முதல் மாநாடு

ஆகஸ்டு 26, 27 சனி, ஞாயிறு தேதிகளில்

★ ........... கோவில்பட்டியில் ........... ★

தலைவர் : மு. கருணாநிதி

திறப்பாளர் : டி. கே. சீனிவாசன்

பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், இரா. இளம்வழுதி, ஈ. வி. கே. சம்பத், இராம. அரங்கண்ணல், ஆகியோரும் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

| | | |
|---|---|---|
| W. D. துரைசாமி, செயலாளர். | பாலகிருட்டிணன், தொ. ப. தலைவர். | ஈ. வே. அ. வள்ளிமுத்து, (நகரசபைத் தலைவர்) வரவேற்புக்குழுத் தலைவர். |
| எஸ். நடராசன், கலிங்கன், துணைச் செயலாளர்கள். | ஆ. திராவிடமணி, விளம்பர உறுப்பினர். | எஸ். பி. துரைசாமி, பொருளாளர். |

ஈ. என். ஏ.; நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோர் நடிக்கும் "சந்திரமோகன்" நாடகம் நடைபெறும்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

மாநாட்டுக் கட்டணம் (இரண்டுநாள் உணவுடன்)

வரவேற்பாளர் ரூ. 5.

பிரதிநிதி ரூ. 4.

பார்வையாளர் ரூ. 1. (உணவு கிடையாது.)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press 95, Tirukkachinambi Street, Kancheepuram.